வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 19.06.2023 திங்கட்கிழமை இதழ் : 192 பக்கங்கள் : 16




# 2024 ஜனாதிபதி தேர்தல் எந்த மாற்றமும் இல்லை!

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 19

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடந்தே தீரும். இதில் எந்த மாற்றமும் இல்லை. இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டு வெற்றி பெறுவார் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு நிச்சயம் தீர்வு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றிரவு கொழும்பில் தன்னை சந்தித்த செய்தியாளர்களிடமே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

மேலும், அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. தேர்தல் நிச்சயம் 15

## நயினை நாகபூசணிக்கு இன்று கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி இரவு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாளான ஞாயிற்றுக் கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த 15

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு; இறுதி முடிவு எட்டப்படவில்லை

### பதில் நிதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை முன்னெடுக்கும் செயன்முறை குறித்த தீர்மானம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. வங்கி மற்றும் நிதித் துறையின் உறுதித் தன்மையை உறுதி செய்வதில் அரசு முழு அர்ப்பணிப்புடன் உள்ளதாக பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்படும் கடன் 15

## இலங்கை தமிழரசு கட்சியின் உயர் குழு இன்று கூடுகின்றது

கொழும்பு, ஜூன் 19

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் உயர் பீடக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடந்த பேச்சு தொடர்பிலும், எதிர்காலச் செயல்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளன - என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## 14.3 வீதமான மக்களே வறுமை கோட்டுக்குள்!

### இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஜூன் 19

நாட்டில் நபர் ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் 13,777 ரூபாய் போதுமானது - என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அத்துடன், நாட்டின் மொத்த சனத்தொகையில் 14.3 சதவீதம் பேரே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளனர் என்றும் அது கூறியுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில், நாட்டில் நபர் 15

## கோட்டாபய அரசை வீழ்த்தும் இரண்டாவது சூழ்ச்சி ஆரம்பம்

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, ஜூன் 19

நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை தொடர்ந்தால் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தை வீழ்த்தும் இரண்டாவது சூழ்ச்சியின் அத்தியாயம் ஆரம்பித்துள்ளது என்று 15

## உண்மை மற்றும் நல்லிணக்க குழுவின் இறுதி நகல் முதலில் தமிழ் தரப்புக்கு!

### நீதி அமைச்சர் விஜயதாஸ அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 19

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த இறுதி நகல் வடிவை அரசாங்கம் தமிழ் தரப்புகளிடமும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் சமர்ப்பித்த பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த மாத இறுதிக்குள் நகல் வடிவம் நிறைவு பெற்று 15

## கூட்டு தலைமையின் கீழேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### நேற்றைய ஒருங்கிணைப்பு குழுவில் முடிவு

வவுனியா, ஜூன் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் கூட்டுத் தலைமையின் கீழேயே செயல்படும் என்று நேற்றைய ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு அடுத்த இரு ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று தெரிய வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் விருந்தினர் விடுதி ஒன்றில் 15

### தமிழர் பிரச்னை தீர்வு விவகாரம்:

## இந்தியாவில் ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க கூட்டமைப்பு தீர்மானம்!

### மீண்டும் மோடிக்கு கடிதம் எழுதவும் முடிவு

வவுனியா, ஜூன் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 20ஆம் திகதி இந்தியா செல்கிறார். இந்தப் பயணத்தின்போது தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாணுமாறு அவருக்கு இந்திய பிரதமர் ஊடாக கடுமையான அழுத்தத்தை - நெருக்கடியை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

வவுனியாவில் அந்தக் கட்சியின் தலைவர்கள் - முக்கியஸ்தர்கள் நேற்று கூடிப் பேசியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, இணைந்த வடக்கு - கிழக்கில் அதிகபட்ச அதிகார 15

## மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்!

ஜெனிவா, ஜூன் 19

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது அமர்வு இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த அமர்வில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாதது குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் தனது கவலையை வெளியிடுவார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்த தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடுகள் உத்தியோக 15

# புதிய அரசியல் சூழலை உருவாக்கும் சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குக!

## ஜனாதிபதியிடம் முஜிபுர் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 19

பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து புதிய அரசியல் சூழலை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம் - என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

நாடு கடந்த ஆண்டை விட இவ்வாண்டு முன்னேற்றமடைந்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டாலும் சர்வதேசம் இலங்கை எந்த மட்டத்திலுள்ளது என்பது குறித்து அவதானமாகவே உள்ளது.

கடந்த ஆண்டை விட இவ்வாண்டு மக்களின் அடிப்படை செலவுகள் 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மக்கள் தமது அன்றாட உணவு தேவைக்காக 53 சதவீதத்தை செலவிடுகின்றனர். உணவற்ற தேவைகளுக்காக 47 சதவீதத்தை செலவிடுகின்றனர்.

கடன்களை மீள செலுத்துவதற்காக 23 சதவீதத்தையும், எரிபொருளுக்காக 13 சதவீதத்தையும் செலவிடுகின்றனர். அத்துடன், நாட்டில் வருமானம் குறைந்தவர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாக அதிகரித்துள்ளது. பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளமையே இதற்கான காரணமாகும்.

சுமார் 14 இலட்சம் குடும்பங்கள் வறுமை நிலையிலுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறான நிலைமையிலும் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரமே தங்கியுள்ளது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உற்பத்தி பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசாங்கத்திடம் அதற்கான எவ்வித திட்டமிடல்களும் இல்லை.

எனவே, பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துப் புதிய அரசியல் சூழலை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம். நாட்டை வங்குரோத்தடையச் செய்த தரப்பினருடன் இணைந்து பொருளாதாரத்தை உறுதிப்படுத்த முடியாது - என்றார். (ஐ)



# பாகிஸ்தான் போர் கப்பல் நேற்று கொழும்பு வந்தது!

கொழும்பு, ஜூன் 19

பாகிஸ்தான் கடற்படை கப்பல் பி. என். எஸ் 'திப்பு சுல்தான்' நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நல்லெண்ண பயணமாக வருகை தந்த இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

பி. என். எஸ். 'திப்பு சுல்தான்'134.1 மீ நீளமுள்ள போர் கப்பலாகும். கப்டன் ஜாவாத் ஹூசைன் தலைமையிலான இந்தக் கப்பல் 168 பேர் கொண்ட குழுவினருடன் வருகை தந்துள்ளது.

கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், இரு நாடுகளின் கடற்படைகளுக்கும் இடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்தும் பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தநிலையில், தனது உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு, 'திப்பு சுல்தான்' எதிர்வரும் நாளை செவ்வாய்க்கிழமை நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (ஐ)

# தொழில் அமைச்சருக்கு எதிராக தொழில்சங்கங்கள் வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஜூன் 19

தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் இருந்து தொழில் சங்கங்கள் நீக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம், முதலாளிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் அடங்கிய முத்தரப்புக் குழுவான தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலிருந்து நான்கு பெரிய தொழிற்சங்கங்கள், தேவையான உறுப்பினர்களை நியமிக்கவில்லை என்ற காரணத்திற்காக தொழில் அமைச்சர் நீக்கினார்.

சுயாதீன தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்தை நீக்கிவிட்டு, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அந்த இடத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி தொழிற்சங்கம், இந்த தீர்மானத்தை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

# நாட்டுக்கு விரோமான அழிவு தரும் பயணத்தில் பெரமுன ஈடுபடாது!

## அமைச்சர் பிரசன்ன சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 19

சிறீ லங்கா பொதுஜன பெரமுன நாட்டுக்கு விரோதமான அழிவுகரமான பயணத்தை மேற்கொள்ளாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா - உடுகம்பளை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சி நிரலும் தமது கட்சிக்கு இல்லை - எனவும் அவர் கூறினார். (ஐ)

# கலப்பட மிளகாய்த்தூள் விற்பனை அதிகரிப்பு!

## சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஜூன் 19

சந்தையில் கலப்படம் செய்யப்பட்ட மிளகாய் தூளின் விற்பனை அதிகரித்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கோதுமை மா, உப்புத்தூள் மற்றும் வர்ண தூள்கள் என்பன மிளகாய் தூளுடன் கலக்கப்படுவது அதிகரித்துள்ளது. சந்தையில் ஒரு கிலோகிராம் மிளகாய் தூள் 1,600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்தநிலையில், 40 சதவீதம் வரையில் கலப்படம் செய்யப்பட்ட மிளகாய் தூள் சந்தையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார தெரிவித்துள்ளார்.

சந்தையில் மிளகாய் தூளின் விலை அதிகரித்தமையால், அதிக இலாபத்தை ஈட்டுவதற்காக வர்த்தகர்கள் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் - என்றும் அவர் கூறினார்.

இந்தநிலையில், கலப்பட பொருட்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நுகர்வோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இறப்பர் செய்கையிலும் ஒரு வகை நோய் பரவல்

கொழும்பு, ஜூன் 19

ரிங்ஸ்பாட் எனும் ஒரு வகை நோய் தற்போது இறப்பர் செய்கையில் பரவி வருகிறது என்று இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மழை காலம் தொடங்கியவுடன் இந்த நிலை உருவாகியுள்ளதாக தாவர அறிவியல் மற்றும் நுண்ணுயிரியல் நிறுவனத்தின் தலைவர் சரோஜனி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, இறப்பர் மரங்களின் இலைகள் உதிர்ந்து, இறப்பர் பால் விளைச்சல் குறைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# முன்னெப்போது இல்லாத சவாலை இளம் சமூகம் எதிர்கொள்கின்றது

கொழும்பு, ஜூன் 19

தற்போதைய இளைஞர் சமூகத்தினர் முன்னெப்போதும் இல்லாத சவாலை எதிர்கொண்டுள்ளனர் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட சிரமங்களைப் போன்றதொரு நிலைமையை இளைஞர் சமூகம் எதிர்நோக்கி வருகின்றது. இந்த நெருக்கடி நிலைமைக்கு வெற்றிகரமான தீர்வுகளை வழங்கி, இக்கட்டான சூழ்நிலையிலிருந்து இளைஞர், யுவதிகள் விடுபடுவதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (ஐ)

# பொறுப்பதிகாரியை சுட்டுக்கொல்ல முயன்ற சார்ஜன்ட் பணி நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 19

மாலபே பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து ரி -56 துப்பாக்கியால் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரியை சுட்டுக் கொல்ல முயன்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக சந்தேக நபரான சார்ஜன்டுக்கும் பொறுப்பதிகாரிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதன்போதே சார்ஜன்ட் ரி-56 துப்பாக்கியால் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரியை சுட்டுக் கொலை செய்ய முயன்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது, பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள் சந்தேக நபரான சார்ஜன்டை கைதுசெய்த நிலையில், அவர் பொலிஸ் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். தலைமறைவான சந்தேக நபர் இது வரை கைதுசெய்யப்படவில்லை. (ஐ)

# உற்பத்தியாகும் மருந்துகளை ஏற்றுமதி செய்வதற்கு திட்டம்

கொழும்பு, ஜூன் 19

அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் தற்போது 96 அத்தியாவசிய மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று பாராளுமன்றத்தின் சுகாதாரத் துறையின் துறைசார் கண்காணிப்புக் குழு மூலம் தெரிய வந்துள்ளது.

நாட்டின் சுகாதாரத் துறை தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆலோசிப்பதற்காக, சுகாதாரம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போது, இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2022ஆம் ஆண்டு அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் 9 புதிய வகை மருந்துகளை அறிவித்துள்ளதாகவும் மேலும் 20 புதிய வகை மருந்துகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் உபரி மருந்துகளை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாக அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

மருந்து விநியோகத்தில் உள்ள சவால்கள், வெளிநாட்டு உதவி மூலம் மருந்துகளை பெறுவதில் ஏற்படும் பிரச்னைகள், மருந்துகளின் தரத்தை உறுதி செய்தல், மருந்துகளின் விலையை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம், மருந்து தட்டுப்பாடு, மனித வள பற்றாக்குறை போன்ற பிரச்னைகள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.06.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான நகலை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இராஜதந்திரிகளுக்கு வழங்கிய பின்னரே பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கின்றார். தென்னாபிரிக்க நல்லிணக்க மாதிரியை உள்வாங்குவது தொடர்பில் ஏற்கனவே பேசப்பட்டிருந்தது. இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு தென்னாபிரிக்க அரசாங்கமும் உதவுவதாக அறிவித்திருந்தது.

2015இல் ஆட்சி மாற்றம் இடம்பெற்றதை தொடர்ந்தும் இவ்வாறான பேச்சுகள் அடிபட்டன. அரசாங்கம் மட்டுமல்ல, அரசுசாரா நிறுவனங்களும் தென்னாபிரிக்கா தொடர்பில் பேசியிருந்தன. தென்னிலங்கையிலிருந்தும் வடக்கிலிருந்தும் அரசுசாரா நிறுவனங்களின் ஏற்பாட்டில் தென்னாபிரிக்க பயணங்களையும் பலரும் மேற்கொண்டனர். ஆனால், இறுதியில் அனைத்தும் விழலுக்கிறைத்த நீரானது. ஏனெனில், மைத்திரிபால சிறிசேன – ரணில் அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தும் புதிய அரசியல் யாப்புடன் பிணைக்கப்பட்டிருந்தது. புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து நல்லிணக்க முயற்சிகளின் கதையும் முடிவுக்கு வந்தது.

மீண்டும் ரணில் விபத்தாக அதிகாரத்துக்கு வந்திருக்கும் சூழலில் உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பேசப்படுகின்றது. யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகிவிட்டன. இந்த 14 வருடங்களில்

பல்வேறு சுலோகங்கள் உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நல்லிணக்க முயற்சிகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஏன் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியடைந்தன? ஏன் ஆகக்குறைந்தது சிறிதளவுகூட, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சிகளில் முன்னோக்கி நகர முடியவில்லை? இந்தக் கேள்விகளுக்கான பதிலை உற்றுநோக்காமல் நல்லிணக்கத்தை அடைய முடியாது. ஏனெனில், நல்லிணக்கம் என்பது அரசுசாரா நிறுவனங்களின் திட்டமல்ல.

இராஜதந்திர சமூகத்திடமும் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளின் தோல்வி தொடர்பில் தெளிவான புரிதல் இருக்கின்றதா என்பதும் சந்தேகமே! – ஏனெனில், நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் நல்லிணக்கமான சூழல் ஏற்படவேண்டுமாயின் முதலில் தமிழ் மக்களின் தனித்துவமான பிரச்னைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதற்கான தீர்வொன்று அவசியமென்னும் புரிதல் சிங்கள அரசியல் மற்றும் சிவில் சமூகத்தின் மத்தியில் உருவாக வேண்டும். இவை – எல்லாவற்றுக்கும் முதலில், அரசாங்கம் சில விடயங்களை முன்னெடுப்பதில் அரசியல் விருப்புறுதியோடு இருக்கின்றதென்று தமிழ் மக்கள் நம்புவதற்கான அரசியல் சூழல் உருவாக வேண்டும். அரசமைப்பில் இருப்பவற்றையே அமுல்படுத்துவதற்கு ஆற்றலற்றிருக்கும் அரசாங்கம் நல்லிணக்க முயற்சியில் முன்னோக்கிப் போவதாகக் கூறுவதை எவ்வாறு தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியும்?

நல்லிணக்கம் என்பது இரண்டு வேறுபட்ட கலாசாரம் மற்றும் அரசியல் பின்பலமுள்ள மனிதர்களுக்கு இடையிலான விவகாரமல்ல – மாறாக இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் இருப்பு தொடர்பான பிரச்னை. அதற்கான முறையான ஏற்பாடுகள் இல்லாமல் ஒருபோதும் நல்லிணக்கம் உருவாக முடியாது. வேண்டுமானால் நல்லிணக்கம் தொடர்பில் உச்சரிக்கலாம் – சில அரசுசாரா நிறுவனங்களுக்கு நிதி கிடைக்கலாம். மேற்குலகமும் தாங்கள் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவுவதாக கூறிக்கொள்ளலாம். ஆனால், இறுதியில் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகவே முற்றுப்பெறும். கடந்த 14 வருடங்களாக பேசப்பட்ட நல்லிணக்கத்தின் கதை இந்த நிலையில்தான் இருக்கின்றது.



# வேண்டுவன அருள்வாள் நயினை நாகபூசணி தாய்!

*வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*

நயினையம்பதியிலே உறைந்திருக்கும் நாகபூசணி அம்பிகையை நாகம் பூசித்த வரலாறு அற்புதமானது – அநாதியானது. நாகபூசணி என்ற நாமகரணம் நாகம் பூசித்து வழிபாடு இயற்றியமையால் அம்பாளுக்கு ஏற்பட்டது என்பது வரலாறு.

நாகபாம்பு ஒன்று நயினாதீவுக்கு வடக்காக அமைந்துள்ள புளியந்தீவிலிருந்து நாள்தோறும் பூக்களை எடுத்து வந்து அம்பாளை வழிபடுவதையே வழக்கமாக கொண்டிருந்தது. வழமை போலவே ஒருநாள் பூவை எடுத்து வருகின்ற வழியில் கருடனை தற்செயலாக சந்தித்தது. கருடன் தன்னுயிரை பறிக்கப்போகும் உண்மையை உணர்ந்தும் கொண்டது. அவ்விதமே கருடனும் நாகத்தின் உயிரை பறிப்பதற்கு முயற்சித்தது.

இந்த சந்தர்ப்பத்தில் நாகம் பய உணர்வின் மேலீட்டோடு கடல் நடுவே இருந்த மிகப் பெரிய கல்லின் மீது தனது உடல்முழுவதையும் சுற்றிக்கொண்டது. கருடனும் இன்னொரு கல்லில் அமர்ந்த படி நாகத்தின் உயிரைப் பறிப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தது.

அந்த சந்தர்ப்பத்திலே கடல் வழியாக மரக்கலம் ஒன்றிலே பண்டங்களை ஏற்றி வந்த வணிகன் இந்தக் காட்சியை கண்டான். நாகத்தின் மீது கருசனை கொண்டுஅதனை காப்பாற்ற முயற்சித்தான்.

நாகத்தை கொன்று விடாதே எனக் கருடனை கெஞ்சினான். கருடன் வணிகனை விளித்து “நீ உன்னிடமுள்ள செல்வங்கள் அனைத்தையும் எடுத்து வந்து அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதாக உறுதி அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் நான் நாகத்தை கொல்லாது விட்டு விடுகின்றேன்”, என்று மொழிந்தது.

வணிகனும் அதற்கு சம்மதித்தான். கருடன் நாகத்தை கொல்லாது அவ்விடம் விட்டு நீங்கியது.

வணிகனும் நாடு திரும்பினான். நடந்த விடயங்கள் தொடர்பில் மனைவிக்கு எடுத்துக் கூறினான். அந்த சந்தர்ப்பத்திலே கண்ணைப்பறிக்கும் பேரொளி தோன்றி மறைந்தது. அம்பாளின் அற்புதத்தை எண்ணி வியந்தனர். தன்னிடமுள்ள செல்வங்கள் அனைத்தையும் நயினாதீவுக்கு கொண்டு வந்து அம்பாளுக்கு அழகிய ஆலயம் அமைத்தான்.

அத்தகு அற்புதங்களின் வியாபாகமே அன்னையின் சந்நிதானம். இன்று பெருவிருட்சமாக வியாபித்து அடியவர்களை ஆற்றுப் படுத்துகின்றது.

ஆகம மரபுக்கு உட்பட்ட முறையில் அமைந்து விளங்கும் இந்த ஆலயம் கருவறைக்குள் நிமிர்ந்து காணப்படும் கருநாகச் சிலை வடிவமும் அதன் கீழ் உள்ள அழகிய பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அருவுருவ வடிவமான அம்பாளின் திருவுருவும் சுயம்பு உருவங்களாகவே உள்ளன. அத்துடன், அம்பாளின் கால்சிலம்பு விழுந்த புவனேஸ்வரி பீடமாக இந்த ஆலயம் கருதப் படுகிறது.

வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுச் சிறப்பு மிக்க இந்த ஆலயம் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. அதன்பின்னர் இந்த ஆலயத்தை இராமலிங்கம் இராமச்சந்திரர் என்பவரால் 1788 இல் கட்டப் பெற்றது. 1935 ஆம் ஆண்டு கிழக்கு வாயில் இராஜகோபுரம் கட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் விமானம் 1951ஆம் ஆண்டு அழகாக அமைக்கப்பட்டது. வெளியில் நுழைவாயில் கிழக்கு நோக்கிய வாயிலையுடைய 108 அடி உயரமான நவதள நவகலச இராச கோபுரத்திற்கு 2012 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலயத்தின் பெருந்திருவிழா ஆனிப் பூரணையை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு நடைபெறுவது வழக்கமாகும். ஆரம்பத்தில் பத்து நாட்களே திருவிழா நடைபெற்றது. 1960 ஆம் ஆண்டிலிருந்து 15 நாட்கள் நடைபெறுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 19 திங்கட்கிழமை

சோபகிருது வருடம் - ஆனி 04

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 06.00 - 07.30 |
| ராகு காலம் | : | 07.30 - 09.00 |
| திதி | : | துவிதியை |




**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன் பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும்.

**இடபம்**
கடந்த 2 நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மத்தியில் மறைத்து பாராட்டப்படுவீர்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வாகன வசதிப் பெருகும். மேலதிகாரி உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

**துலாம்**
கடந்த 2 நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். கோபத்தை தவிர்க்க வேண்டிம்.

**தனுசு**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் வருவார்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**மகரம்**
எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவுக் கிட்டும். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
எதிர்ப்புகள் அடங்கும். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். மேலதிகாரிகளால் உங்களுக்கு அமைதி நிலவும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள். உழைப்பால் உயரும் நாள்.

# பெற்றோர் பணம் வாங்கிக்கொண்டு வாக்களிப்பதை தடுக்க வேண்டும்!

## நடிகர் விஜய் மாணவர்களுக்கு அறிவுரை

*சென்னை, ஜுன் 19*

பெற்றோர் பணம் வாங்கிக் கொண்டு வாக்களிப்பதை மாணவர்கள் தடுக்க வேண்டும் என்று அரசு பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் விழாவில் நடிகர் விஜய் அறிவுறுத்தினார்.

விஜய் மக்கள் இயக்கம் சார்பில் தமிழகத்தில் 234 தொகுதிகளிலும், 10, 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு நிதியுதவி வழங்கி, கௌரவிக்கும் விழா சென்னை நீலாங்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ரசிகர்கள் புடைசூழ அங்கு வந்த நடிகர் விஜய், மேடையின் கீழ் அமர்ந்திருந்த மாற்றுத் திறனாளி மாணவர்களிடம் நலம் விசாரித்தார். தொடர்ந்து, பிளஸ்-2 பொதுத்தேர்வில் 600-க்கு 600 மதிப்பெண் பெற்ற திண்டுக்கல் மாணவி நந்தினிக்கு வைர நெக்லஸ் மற்றும் நிதியுதவி வழங்கினார்.

பின்னர், தொகுதி வாரியாக முதல் 3 இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தலா 25 ஆயிரம் (இந்திய) ரூபாய், ரூ.15 ஆயிரம், ரூ.10 ஆயிரம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர், அண்மையில் வெளியான திரைப்படத்தில் இடம்பெற்ற “காடு இருந்தால் எடுத்துக் கொள்வார்கள். பணம் இருந்தால் பிடுங்கிக் கொள்வார்கள். ஆனால், படிப்பை மட்டும் உன்னிடம் இருந்து எடுத்துக்கொள்ளவே முடியாது” என்ற வசனம் என்னை மிகவும் பாதித்தது. எனவே, மாணவர்களின் கல்விக்கு உதவ வேண்டுமெனக் கருதினேன்.

பள்ளி, கல்லூரிகளுக்கு சென்று பட்டம் பெறுவது மட்டும் முழுமையான கல்வியாகி விடாது. பள்ளியில் பயின்றதை மறந்த பிறகு, எது மிஞ்சி இருக்கிறதோ அதுதான் கல்வி என்று அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் கூறியுள்ளார். அதை மனதில் கொள்ள வேண்டும்.

இதுவரை பெற்றோர் பாதுகாப்பில் இருந்தீர்கள். உயர் கல்விக்காக வெவ்வேறு ஊர்களுக்குச் செல்ல நேரிடலாம். விடுதிகளில் தங்கிப் பயிலலாம். புதிய நண்பர்கள் கிடைக்கலாம். முதல்முறையாக தற்போது பெற்றோரின் பாதுகாப்பு வளையத்தில் இருந்து, புதிய வாழ்க்கைக்குள் செல்லப் போகிறீர்கள். அங்கு உங்களுக்கு கிடைக்கும் சுதந்திரத்தை சரியாகக் கையாள வேண்டும் - என்றார். (ஐ)

# நடிகர் விஜயின் கருத்துக்கு அமைச்சர் உதயநிதி வரவேற்பு

*சென்னை, ஜுன் 19*

மாணவர்கள் தங்களது பெற்றோர், வாக்களிக்க பணம் வாங்குவதைத் தடுக்க வேண்டும் என்று நடிகர் விஜய் பேசியதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உதயநிதி ஸ்டாலின் கூறும்போது, “வாக்களிக்க பணம் வாங்க வேண்டாம் என்று பேசியது நல்ல விசயம் தான். விஜய் நல்லதுதானே சொல்லியிருக்கிறார். யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். அதேபோல, அரசியலுக்கு யார் வரவேண்டும், வரக்கூடாது என்று கூறுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை” என்றார்.

இதேபோல, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், ச. ம. க. தலைவர் சரத்குமார், இந்திய ஜனநாயகக் கட்சி நிறுவுனர் பாரிவேந்தர் எம்.பி. உள்ளிட்டோரும் நடிகர் விஜயின் பேச்சுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர். (ஐ)

# பா. ஜ. கட்சியின் மாநில செயலாளர் சூர்யா கைது

*சென்னை, ஜுன் 19*

மதுரை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசனுக்கு எதிராக சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பினார் என்று பா. ஜ. க. மாநில செயலாளர் எஸ். ஜி. சூர்யா சென்னையில் கைது செய்யப்பட்டார்.

பா. ஜ. க. மாநில செயலாளர் எஸ். ஜி. சூர்யா, கடந்த 7ஆம் திகதி தனது ருவிற்றர் உள்ளிட்ட சமூகவலைதள பக்கங்களில் ஒரு பதிவு வெளியிட்டிருந்தார்.

இதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 12ஆம் திகதி மதுரை மாநகர காவல் ஆணையரிடம் அந்தக் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் புகார் அளித்தனர். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்த மதுரை மாநகர சைபர் குற்றப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் நள்ளிரவு, சென்னை தி.நகரில் எஸ். ஜி. சூர்யாவை கைது செய்து மதுரைக்கு அழைத்துச் சென்றனர்.

இதுகுறித்து தகவலறிந்த பா. ஜ. கவினர், சென்னை எழும்பூரில் உள்ள பொலிஸ் ஆணையர் பணிமனைக்கு வெளியே நள்ளிரவில்கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, எஸ். ஜி. சூர்யா கைது குறித்து முறையான தகவல் தெரிவிக்கவில்லை எனவும், பா. ஜ. கவை பழிவாங்கும் நோக்கில் தி. மு. க. அரசு செயல்படுவதாகவும் குற்றம்சாட்டி சாலை மறியலில் ஈடுபட்டனர். பொலிஸார் பேச்சு நடத்தியதை தொடர்ந்து பா. ஜ. கவினர் சாலை மறியலை கைவிட்டனர்.

இதனிடையே, கைது செய்யப்பட்ட எஸ். ஜி. சூர்யாவை 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# எமது முயற்சியால் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றன

*சென்னை, ஜுன் 19*

கடந்த இரு ஆண்டுகளாக அரசு எடுத்த முயற்சிகளால் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றன என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் இந்திய நிதி நிறுவனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த அதி நவீன வங்கி மற்றும் காப்பீடு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன.

நகரின் மையப் பகுதியில் 56 ஏக்கர் நிலப்பரப்பளவில் வணிக, குடியிருப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.116 கோடி மதிப்பீட்டில் நிதி நுட்ப நகரம் அமைகிறது.

இதன் அடிக்கல் நாட்டு விழா தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற முதலமைச்சர் உரையாற்றுகையில், இரு ஆண்டுகளாக அரசு எடுத்த முன்னெடுப்புகளால் தமிழ்நாடு தலைநிமிர்ந்து இருக்கிறது. தொழிற்துறை மிக வேகமாக முன்னேற்றங்களை உருவாக்கி வருகிறது. திராவிட மொடல் ஆட்சி பல மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தொழிற்துறை நிகழ்ச்சிகள் - சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் நிகழ்ச்சிகள்.

தமிழ்நாட்டில் படித்த திறன் மிக்க இளைஞர்கள் அதிகம் பேர் உள்ளனர். இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி தொழில் தொடங்க வருகின்றன. டிஜிற்றல் பண பரிவர்த்தனை அதிகரித்துள்ளது. நிதி நுட்ப நகரம் மூலம் சுமார் 80 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும்.

நிதி நுட்ப நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. மதுரை, திருச்சியிலும் நிதி நுட்ப நகரம் அமைக்கப்படும். நிதி நுட்ப நகரங்களில் உலகளாவிய மையமாக தமிழ்நாட்டை மாற்றுவது அரசின் இலக்கு - என்றார். (ஐ)

### மன்னார் இளம் குடும்பஸ்தர் கொலை:

# தம்பியின் காதலுக்காக பேசப்போன அண்ணனே அடித்து கொல்லப்பட்டார்

மன்னார், ஜுன் 19

**நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டார். இவர் தனது சகோதரனின் காதல் விவகாரம் தொடர்பில் பேசச் சென்ற இடத்திலேயே இந்தக் கொலை இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.**

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் சகோதரர் யுவதி ஒருவரை காதலித்து வந்துள்ளார். அந்த யுவதியின் வீட்டுக்கு சனிக்கிழமை காலை சென்ற உயிரிழந்தவரின் சகோதரனை யுவதியின் உறவினர்கள் கடுமையாக தாக்கியுள்ளனர். இதில், காயமடைந்த அவர் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தனது சகோதரர் தாக்கப்பட்டமை குறித்து அறிந்த இளம் குடும்பஸ்தரான சகோதரன் அந்த யுவதியின் வீட்டுக்குச் சென்றுள்ளார். யுவதியின் உறவினர்களுக்கு அவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் முற்றி கை கலப்பாக மாறியது. அப்போதே, யுவதியின் உறவினர்கள், குடும்பஸ்தர் மீது கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கியுள்ளனர்.

படுகாயமடைந்த குறித்த இளம் குடும்பஸ்தர் நானாட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



# கிளிநொச்சி படை முகாமில் மின்னொழுக்கால் தீ பரவல்

கிளிநொச்சி, ஜுன் 19

பூநகரி, முட்கொம்பன் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

சின்ன பல்லவராயன்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமின் கட்டட தொகுதியிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

மின்னொழுக்கு காரணமாகவே தீ பரவியதாகவும் எனினும், சிறிதுநேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. தீயால் ஏற்பட்ட சேத விவரங்களை படைத் தரப்பு வெளியிட மறுத்து விட்டது.

(ஐ)

# சிறப்பு அங்காடியில் திருடர்கள் கைவரிசை

தென்மராட்சி, ஜுன் 19

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள சிறப்பு அங்காடியை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அங்கிருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிறப்பு அங்காடியின் மேற்கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் மூன்று இலட்சம் ரூபாய் பணம், குளிர்பான வகைகள் மற்றும் பால் மா பைக்கெற்றுகளை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டு சம்பவம் அங்கிருந்த பாதுகாப்புக் கமெராவில் பதிவாகியுள்ள நிலையில், சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

# நெல்லியடியில் நகைகள் திருட்டு சந்தேகத்தில் இளம்பெண் கைது

வடமராட்சி, ஜுன் 19

நெல்லியடியில் வீடொன்றில் திருட்டுப்போன ஆறரை பவுண் நகைகளை பொலிஸார் மீட்டதுடன், 24 வயது பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

நெல்லியடி, பொன். கந்தையா வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஆறரை பவுண் நகைகள் திருட்டுப் போயின. அயலவர் ஒருவராலேயே இந்த நகை திருடப்பட்டதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

வீட்டின் உரிமையாளர் வெளியே சென்றிருந்த சமயம் வீட்டின் கதவை உடைத்து நுழைந்து திருட்டு இடம்பெற்றதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அன்றையதினம் மாலை 4:30 மணியளவில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து உடனடியாக விசாரணையில் இறங்கிய கே. விமலவீர தலைமையிலான பொலிஸ் குழுவினர், ஒரு மணி நேரத்துக்குள் சந்தேகநபரை கைது செய்து, நகைகளையும் மீட்டனர்.

திருடியவரை தனியார் நிதி நிறுவனத்தில் தாலிக்கொடியை அடைவு வைத்து 3 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளனர்.

அதில் 2 இலட்சத்து 92 ஆயிரம் பணத்தை மீட்ட பொலிஸார், மிகுதி நகைகளை பிறிதொரு வீட்டின் பூச்சாடியின் கீழ் வைத்திருந்த நிலையில் கைப்பற்றினர்.

(ஐ)

# கப்பம் கோரிய மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜுன் 19

மருந்து உற்பத்தி நிறுவனம் ஒன்றை நடத்தும் நபரிடம் 10 இலட்சம் ரூபாய் கப்பம் கோரிய சந்தேகத்தில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குறித்த மருந்து உற்பத்தி நிறுவனத்தை நடத்துபவரின் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிடும் வகையில் விளம்பரம் செய்து சமூக ஊடகங்களில் வெளியிடுவதாக அச்சுறுத்தியே கப்பம் கோரியுள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

தாம் கூறிய தொகையுடன் பண்டாரகம நகருக்கு வருமாறு குறித்த நபருக்கு கப்பம் கோருபவர்கள் அறிவித்துள்ளனர். இதன்போதே, கப்பம் பெற வந்த மூன்று சந்தேக நபர்களும் பண்டாரகம நகரில் கத்தியுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அலுபோமுல்லை பிரதேசத்தை வசிப்பிடமாகவும், ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ஞானபாஸ்கரோதய முன்பள்ளியில் திறன் வகுப்பறை திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம், ஜுன் 19

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய முன்பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையின் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை முன்பள்ளியின் பெருந்தலைவர் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டு திறன் வகுப்பறையை திறந்து வைத்தார் .



இந்த வகுப்பறைக்கான திறன் பலகையை (ஸ்மார்ட் போர்ட்) கல்வியங்காட்டைச் சேர்ந்த அமரர் ஐயாத்துரை சிவபாக்கியம் நினைவாக அவருடைய பிள்ளைகள் வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மின்சாரம், பெற்றோலியம், மருத்துவம் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்!

## விசேட வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஜுன் 19

மின்சாரம், பெற்றோலிய விநியோகம், மருத்துவமனை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்து விசேட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதி செயலாளரின் ஒப்பத்துடன் நேற்று முன்தினம் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மின்சாரம் வழங்கல், பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகம், மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்கள், நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பராமரிப்பு, உணவு மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து சேவை பணிகள் அல்லது உழைப்பு தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகும்.

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கும் இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இந்த சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக மாற்றப்பட்டுள்ளன என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜா எல சுற்றிவளைப்பில் 27 பெண்கள் கைதாகினர்!

கொழும்பு, ஜுன் 19

ஜா -எல நகரில் முறையான அனுமதி பெறாமல் இயங்கிய 11 மசாஜ் நிலையங்களில் பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையின்போது 27 பெண்களை கைது செய்துள்ளனர்.

இதன்போது குறித்த மசாஜ் நிலையங்களை நடத்திய குற்றச்சாட்டில் 6 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெள்ளிக்கிழைமை நீதிமன்றில் பெறப்பட்ட தேடுதல் உத்தரவுக்கு அமையவே கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதிக்கு முன்பாக ஜா -எல நகரில் இயங்கி வந்த சட்டவிரோத மசாஜ் நிலையங்கள் மற்றும் ஏக்கலை, தடுகமை, துடெல்லை வெலிகம்பிட்டி ஆகிய இடங்களிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டே இவர்கள் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

(ஐ)

# தேரர்களிடம் பணிந்து ஜனாதிபதி மீண்டும் தமிழரை ஏமாற்றக்கூடாது

## தமிழ் அரசியல் தலைவர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

**குருந்தூர் மலை, திரியாய் விடயத்தில் தேரர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தீர்க்கமாக எடுக்கப்பட்ட முடிவுகளை மாற்றி தமிழர்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி. வி. விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே மேற்கண்டவாறு வலியுறுத்தலை செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

தமிழரசு கட்சியின் மாவை. சோ.சேனாதிராசா தெரிவிக்கையில்,

எமது சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குருந்தூர் மலை மற்றும் திரியாய் விகாரைகளுக்கு அருகில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்குமாறே உத்தரவு பிறப்பித்திருந்தார். அவ்வாறான நிலையில் தற்போது அந்த தீர்மானத்துக்கு என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் எதிர்வரும் திங்களன்று கொழும்பில் கூடவுள்ள எமது அரசியல்பீடம் ஆராயவுள்ளது. அதன் பின்னர் நாம் ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் கேள்விகளைத் தொடுக்கவுள்ளோம். அவர் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பில் மிகுந்த கரிசனை எடுக்கவுள்ளோம் என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதாக அறிவித்துள்ளார். ஆனால், தற்போது எல்லாவல மேதானந்த தேரர் அவற்றை குழப்பியடிக்கும் செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளமை கண்டிக்கத்தக்கதாகும். என்னை பொறுத்தவரையில், எல்லாவல மேலானந்த தேரர் உள்ளிட்டவர்கள் பௌத்த சமயத்தின் வரலாற்றை முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும்.

கி. பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளிலேயே சிங்கள மொழி வந்தது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வரலாறு அவர்களுக்கு கசப்பானதாக இருக்கின்றது. தமிழ் - பௌத்தர்கள் இருந்துள்ளார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு தயாரில்லை. ஆகவே, வரலாற்றை மாற்றி, பின்னர் அதனடிப்படையில் தமிழர்களுக்கு சொந்தமான பகுதிகளை கையகப்படுத்த முனைவது ஆக்கிரமிப்பாகும். ஆகவே இந்த விடயங்களில் ஜனாதிபதி ரணில் தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்,

குருந்தூர் மலையில் உள்ள விகாரைக்குச் சொந்தமில்லாத 229 ஏக்கர்களையும் விடுவிப்பதற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் உள்ளது. அந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வருகை தந்திருந்தார். அதன் பின்னர், எம்முடன் நடத்திய சந்திப்பின்போதும் அதற்கான உத்தரவாதத்தினை அவர் வழங்கியிருந்தார். தற்போது அந்த உத்தரவாதங்களுக்கு நேரெதிராக அவர் செயற்பட முனைவதானது கண்டிக்கத்தக்கதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு உத்தரவாதங்களை வழங்குவதும் பின்னர் தேரர்களுக்கு அடிபணிந்து அவற்றை பின்வாங்குவதும் தான் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. ஆகவே அவர் இவ்வாறான மாறுபட்ட செயல்பாடுகளை தவிர்த்து நேர்மையாக நடக்க வேண்டும் - என்றார்.

புளொட் தலைவர் த. சித்தார்த்தன் கூறுகையில்,

வடக்கு, கிழக்கில் இனப் பிரச்னையானது தற்போது மதப் பிரச்னையாக உருவெடுக்கும் ஆபத்துகள் தோன்றியுள்ளன. உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு லிபரல் முகம் காணப்படுகின்றபோதும் அவர் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றவராக உள்ளார். ஆகவே அவர் தனது தேர்தல் அரசியலை மையப்படுத்தியே ஏனைய பெரும்பான்மையினத் தலைவர்கள் போன்றே செயல்படுகின்றார். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

உண்மையில், இந்துக்களோ தமிழர்களோ பௌத்தத்துக்கு எதிரான மனோநிலைமையைக் கொண்டிருக்கவில்லை. கோட்பாட்டு ரீதியாக இவ்விரு சமயங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படவில்லை. ஆனால், வன இலாகா, தொல்பொருள் போன்ற விடயங்களை மையப்படுத்தி ஆக்கிரமிக்கப்படும் காணிகளில் பௌத்த அடையாளங்களை நிறுவி அங்கு வலிந்து குடியேற்றங்களைச் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேரர்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், இனப் பிரச்னைக்கான தீர்வினை காண்பது மிகக் கடினமானதாக இருக்கும் - என்றார்.

ஈ. பி. ஆர். எல். எவ்வின் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சிக் காலத்திலும் இவ்விதமான செயல்பாட்டையே மேற்கொண்டார். அவர் புதிய அரசியலமைப்பு உருவாக்குவதாக அறிவித்துவிட்டு, பின்னர் மைத்திரியை வீழ்த்தும் செயல்பாட்டையே முன்னெடுத்தார். இதற்கிடையில் வடக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீடுகளையும் செய்தார்.

அதேநேரம், படையினர் ஊடாக விகாரைகளை அமைக்கும் பணிகளையும் அவர் தடுக்கவில்லை. இந்த நிலைமைகளால் தான் தற்போது வரையில் பிரச்னைக்கான தீர்வு உரிய வகையில் காணப்படாமல் இருக்கும். ஆனால், தொடர்ச்சியாக தமிழர்களை ஏமாற்றும் செயல்பாடுகள்தான் நடைபெறுகின்றன.

குருந்தூர் மலை விகாரை விடயத்தில் நீதிமன்றத்தின் கட்டளையை மீறியே அந்த விகாரை கட்டப்பட்டது. அதேநேரம், 1933ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அங்கு 78 ஏக்கர்கள் தான் விகாரைக்கு சொந்தமானதாக கூறப்படுகின்றது. அங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளும் உள்ளன. அவ்வாறு இருக்கின்றபோது அந்த மக்களை வெளியேற்றி 300 ஏக்கர்கள் வரையில் தற்போது சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் - என்றார்.

# போலி சாரதி அனுமதிப் பத்திரம் தயாரிக்கும் நிலையம் சிக்கியது

கொழும்பு, ஜூன் 19

கொழும்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் முன்பாக போலியான சாரதி அனுமதிப் பத்திரங்கள் தயாரிக்கும் நிலையமொன்று சோதனையிடப்பட்டு, அதன் உரிமையாளரும் மற்றொருவரும் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டனர் என்று நுகேகொடை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இரண்டு தேசிய அடையாள அட்டைகள், ஒரு கடவுச்சீட்டு, 9 தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள், 4 சாரதி அனுமதிப் பத்திரங்கள், போலியான சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு தயாரிக்கப்பட்ட தரவுகள் அடங்கிய கணினி மற்றும் 5.25 கிராம் போதைப்பொருள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நுகேகொடை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு விவகாரம் சீனா செல்கிறார் அமைச்சர் சப்ரி!

கொழும்பு, ஜூன் 19

சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின்பேரில் அடுத்த வாரம் சீனா செல்லவுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி , இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு அவசியமான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது விசேட பேச்சு நடத்தவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையை பூர்த்திசெய்யவேண்டியுள்ள நிலையில், அதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து வினவியபோதே அமைச்சர் அலி சப்ரி மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பிரஸ்தாபித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

கடன் மறுசீரமைப்பு செயன்முறையை பொறுத்தமட்டில் நான்கு பிரதான தரப்பினர் உள்ளனர். அவர்களில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச பல தரப்பு பங்காளிகளிடம் பெற்ற கடன்களை தொடர்ந்து செலுத்திவருகின்றோம். அதனைத் தவிர்க்க முடியாது.

இரண்டாவதாக சர்வதேச இரு தரப்புக் கடன்வழங்குனர்கள் என்ற ரீதியில் நாடுகளிடம் பெற்ற கடன்களை மறுசீரமைப்பதற்கு அவசியமான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், அதில் சீனா கண்காணிப்பாளராக செயல்படுகின்றது.

மூன்றாவது தரப்பினர் சர்வதேச பிணைமுறி பங்குதாரர்களாகிய வர்த்தக கடன்வழங்குனர்களாவர். அவர்களுடனான பேச்சுகளின் முடிவில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதுடன், அதில் கைச்சாத்திடும் நிலைக்கு வந்திருக்கின்றோம். நான்காவது தரப்பினரான உள்ளகக் கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்து பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச நாணய நிதியம் எமக்கு கடன் ஸ்திரத்தன்மை தொடர்பான செயல்திட்டமொன்றை வழங்கியிருக்கின்றது.

அச்செயல்திட்டத்தின் பிரகாரம் கடன் ஸ்திரத்தன்மையை அடைந்துகொள்வதற்கு 17 பில்லியன் டொலர் உள்பாய்ச்சல் அவசியமாகின்றது. இதனை அடிப்படையாக்கொண்டே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

எனவே, இறுதியாக சீனா எமக்கு ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. எதிர்வரும் வாரம் நான் சீனா செல்கின்றேன். அங்கு நடைபெறவுள்ள பொருளாதார கூட்டமொன்றில் பங்கேற்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இரு தரப்பு விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக சீன அரசாங்கமும் அழைப்பு விடுத்துள்ளது. எனவே இதன்போது கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விசேடமாகப் பேசுவோம். சீனா எம்மைக் கைவிடாது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது - என்றார். (ஐ)

# சித்திரவதைக்கு உள்ளானவரின் குடும்பத்தவருக்கு முன்னணி ஆதரவு!

முல்லைத்தீவு, ஜூன் 19

ஒட்டுசுட்டான் - கிழவன்குளத்தில் கடந்த புதன்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்ட நவரத்தினம் நவரூபன் தற்போது கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியினர் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தவரை சந்தித்து பேசினர்.

முன்னதாக, கடந்த வியாழக்கிழமை கிழவன்குளத்தில் வசிக்கும் நவரூபனின் வீட்டுக்கு சென்ற 4 விசேட அதிரடிப் படையினரும் 7 வனவளத் திணைக்கள அதிகாரிகளும் அவரை கைது செய்தனர்.

பின்னர், அவரை கட்டிவைத்து அடித்து சித்திரவதை செய்தனர். அத்துடன், பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி வழக்கு தொடுத்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்த வழக்கில் நீதிமன்றம் அவருக்கு பிணை அனுமதி அளித்தது. பொலிஸாரின் சித்திரவதைகளால் படுகாயமடைந்த நவரூபன் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று அவரின் குடும்பத்தவர்களை சந்தித்தனர். (ஐ)

# துல்ஹஜ் தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று

கொழும்பு, ஜூன் 19

ஹிஜ்ரி 1444 துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று திங்கட்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள், கொழும்பு மேமன் சங்க உறுப்பினர்கள், வளிமண்டலவியல் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் எந்தப் பிரதேசத்திலாவது துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112 432110, 0777 316415 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் மக்களை கேட்டுள்ளது. (ஐ)

# 100இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கடமைகளை பொறுப்பேற்கவில்லை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 19

**இந்த வருடத்தில் மருத்துவர்களாக நியமனம் பெற்ற ஆயிரம் 300 பேரில் 100 பேர் சுகாதாரத் துறையில் வேலை பெற்றுக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.**

நியமனம் செய்யப்பட்ட சுமார் 50 மருத்துவர்கள் நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ள வரவில்லை. 50இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பணியைப் பொறுப்பேற்கவில்லை என்றும் அரச அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார் .

இதே நிலை நீடித்தால், எதிர்காலத்தில் சுகாதார துறை கடுமையான நெருக்கடிக்கு ஆளாவதை தவிர்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ சேவையில் இணைந்துகொள்ளும் மருத்துவர் ஒருவரின் அடிப்படை சம்பளம் 54,000 ரூபாய். இதற்கமைய அவரின் நாளாந்த சம்பளம் சராசரி 2000 ரூபாயாகும். இந்த குறைந்த வருமானத்தை பெற மருத்துவர்கள் விரும்பாத நிலையில் அவர்கள் மருத்துவ துறையில் நிலைத்து நிற்பார்கள் என நம்பிக்கை இல்லை என்றும் அவர் கூறினார்.

விசேட மருத்துவர்கள் உட்பட பெருமளவான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால் அம்பாந்தோட்டை, அநுராதபுரம், தெஹியத்தகண்டிய போன்ற மருத்துவமனையின் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மருத்துவமனையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மருத்துவர்களின் மதிப்பைக் கருத்தில் கொண்டு மருத்துவர்களின் சம்பளம் வழங்கப்பட வேண்டும், சுகாதாரத் துறையைப் பாதுகாக்கும் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் - என்றும் அவர் இதன்போது வலியுறுத்தியிருந்தார். (ஐ)

# யாழிலிருந்து கஞ்சா கடத்தியவர் வவுனியாவில் வைத்துக் கைது!

வவுனியா, ஜூன் 19

சொகுசு பேருந்தில் கஞ்சா கடத்திச் சென்ற நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழப்பாணத்தல் இருந்து கொழும்பு நோக்கி சென்ற சொகுசு பேருந்தில் கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைத்தது.

இதற்கமைய வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த பேருந்தை வழிமறித்து அதில் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது பேருந்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒரு கிலோ 900 கிராம் கேரள கஞ்சாவை கைப்பற்றினர். அத்துடன், அதனை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக ஒருவரை கைது செய்தனர்.

கைதானவர் ஏற்கனவே கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸார் கைது செய்யப்பட்டிருந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் கொழும்பை சேர்ந்த 51 வயது நபர் என்று அறிய வருகின்றது. (ஐ)

# துப்பாக்கி சூட்டில் இருவர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 19

மினுவாங்கொடை, பஸ்தியன் மாவத்தையில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த 33 மற்றும் 43 வயதான இருவரும், கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கார் ஒன்றில் வந்த இருவர், சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த இருவரையும் இலக்கு வைத்து, துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கெட்ட சக்தியை நீக்குவதாகக் கூறி நடத்திய பூசையில் பெண் மரணம்!

கொழும்பு, ஜூன் 19

அமானுஷ்ய சக்தியை அகற்றுவதற்காக கூறி நடத்தப்பட்ட பூசையின் போது பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று லக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிரியாகமவை சேர்ந்த (48) வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக பூசையை நடத்திய 25 வயது இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

லக்கலை, தாஸ்கிரியவில், நோய்வாய்ப்பட்ட இரண்டு பெண்கள் மற்றும் ஓர் ஆண் ஆகியோரை குணமடைய செய்வதாகக் கூறியே இந்தப் பூசை நடத்தப்பட்டுள்ளது.

இரவு முழுவதும் நடத்தப்பட்ட பூசையின் போது நோய்வாய்ப்பட்டிருந்த பெண் திடீரென மரணமடைந்தார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# ஊழல் தடுப்பு சட்டம் பாராளுமன்றத்துக்கு

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

ஊழல் தடுப்பு சட்டம் இந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பதில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்துக்கு எந்த ஒரு மக்கள் பிரதிநிதியும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டின் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை துரிதப்படுத்துவ



தற்கு ஜனாதிபதியின் பிரான்ஸ் பயணம் மிகவும் முக்கியமான தாக அமையும் என்றும் அவர் மேலும் சொன்னார். (ஐ)

# மின்சார பேருந்து சேவையை கொழும்பில் இயக்க அனுமதி

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

கொழும்பில் மின்சார பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரைச் சுற்றி மின்சார பேருந்துகளைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கேற்ப, எதிர்காலத்தில் மின்சார பேருந்துகளை இயக்குவதற்கான நோக்கத்தை நாங்கள் முன்வைப்போம்.

இந்த புதைபடிவ எரிபொருட்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்கும் வகையில்,




எரிபொருள் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதால் போக்குவரத்து கட்டண உயர்வு பிரச்னைக்கு பொது போக்குவரத்தை மின்சார வழிக்கு மாற்றுவதே தீர்வு.

எதிர்காலத்தில் பேருந்துகள் மட்டுமின்றி முச்சக்கரவண்டி, வான்கள் மற்றும் இதர ரயில்களையும் மின்சாரத்தில் இயங்குபவையாக மாற்ற முயற்சித்து வருகிறோம்.

இந்த ஆண்டில், தனியார் துறை மின்சார முச்சக்கர வண்டிகளை சந்தையில் அறிமுகப்படுத்தும்.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான நட்டத் தில் இயங்கும் சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஐ)

# சுகாதார பரிசோதகரை தாக்கியவர் கைதானார்

கொழும்பு, ஜூன் 19

சோதனையின்போது, பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளரின் மகன் பசறை பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை - பசறை - மீதும்பிட்டி பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை சோதனைக்கு உட்படுத்திய வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மீதும்பிட்டியில் உள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை நிறைவு செய்த சந்தர்ப்பத்தில், குறித்த வர்த்தக நிலையத்தில் உள்ள களஞ்சிய அறையில் மக்கள் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அதனை பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் இரகசிய தகவலொன்று கிடைத்தது.

களஞ்சிய அறையை சோதனைக்காக திறக்குமாறு சுகாதார அதிகாரிகள் கூறினர். அதற்கு மறுப்பு தெரிவித்த வர்த்தக நிலைய உரிமையாளரின் மகன் திடீரென பொது சுகாதார அதிகாரி ஒருவரை தாக்கினார்.

திடீர் தாக்குதலில் காயமடைந்த சுகாதார அதிகாரி பசறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பசறை பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர்.

# கொழும்பில் வீடு வாங்கித் தருவதாக 300,000 டொலர் மோசடி செய்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 19

கொழும்பு, கொம்பனி தெருவில் உள்ள வீடமைப்புத் தொகுதி ஒன்றில் வீடு பெற்றுத் தருவதாக கூறி சுமார் 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 9 கோடி ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டில் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் வெளிநாடு செல்ல முற்பட்ட போது, குற்றப் புலனாய்வு திணைக் களத்தின் கட்டுநாயக்கா பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.சந்தேக நபர் பலரிடம் 3 இலட்சத்து 678 அமெரிக்க டொலர்களை மோசடி செய்தார் என்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மனித உடல்கள், உடையும் பனிப்பாறைகள்: எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட முதல் தமிழ் பெண்ணின் திகில் அனுபவம்!

க. சுபகுணம்

“பயணத்தின் நடுவே பல மரணங்களைப் பார்த்தேன், பல இடங்களில் வேதனை தாளாமல் அழுது தீர்த்தேன். பல இடங்களில் வலியால் துடித்தேன். ஆனால், என்னால் எவரெஸ்ட் சிகரத்தை அடைய முடியுமா என்ற சந்தேகம் ஒருபோதும் வரவில்லை.”

இது எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டுத் திரும்பியுள்ள முதல் தமிழ்நாட்டுப் பெண் முத்தமிழ்செல்வியின் வார்த்தைகள்.

எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைவது மலையேற்ற வீரர்களில் பலருக்கும் ஒரு கனவு. அந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றுத் திரும்பிய முதல் தமிழ் நாட்டுப் பெண்ணாக கடந்த மாதம் சாதனை படைத்தார் முத்தமிழ்செல்வி.







அதைக் கடந்து எவரெஸ்ட் பயணத்தின் நடுவே இருக்கும் இரண்டாவது முகாமை அடைந்தது முத்தமிழ்செல்வியின் குழு.

**எவரெஸ்ட் சிகரத்தை தொடுவது விளையாட்டான காரியமல்ல**

“எவரெஸ்ட் சிகரத்தை ஏறும்போது, அங்கிருக்கும் கடுமையான வெப்பநிலையைத் தாக்குப்பிடிக்க நமது உடலையும் தயார் செய்துகொண்டேயிருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

எங்கள் முகாமில் மொத்தம் மூன்று குழுக்கள் இருந்தன. இந்தியர்கள் குழுவில் நான் இருந்தேன். அதுபோக, சீன குழு ஒன்றும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 4 பேர் கொண்ட குழு ஒன்றும் இருந்தது.

அதில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களைக் கொண்ட குழுவில் இருந்த ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஜேசன் என்ற நபர், எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டுவிட்டுத் திரும்பி வரும்போது, தாக்குப்பிடிக்க முடியாமல் இறந்துவிட்டார்.

அந்தக் குழுவில் இருந்த மற்றொரு நபருக்கு ஒரு கை முழுவதும் ரத்த ஓட்டமே நின்று போகும் அளவுக்கு உறைந்துவிட்டதால், கையையே எடுக்கும் அளவுக்கு பாதிக்கப்பட்டார்,” என்று தனது கண்முன்னால் பார்த்த சம்பவங்களை விவரித்தார்.

இவர்கள் அனைவருமே எவரெஸ்ட் சிகரத்தை ஏறிவிட்டுத் திரும்பி வரும்போது இந்தப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர். அதிலும் ஒருவர் தன் உயிரையே இழந்துவிட்டார். “இதையெல்லாம் பார்த்து எங்களுடன் வந்த ஒரு நபர் மயக்கமடைந்து விழுந்துவிட்டதாக” கூறுகிறார் தமிழ்செல்வி.

முதல் முயற்சி என்பதால், அனைவரும் என் முடிவை எதிர்பார்த்தார்கள். ஆனால், நான் பின்வாங்கப் போவதில்லை என்றேன்.

உடனே அங்கிருந்தவர்கள் என்னை ஒன்றுக்கு இரண்டு முறை ஆழமாக யோசிக்குமாறு அறிவுறுத்தினார்கள். ஆனால், நான் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தே தீரவேண்டுமென உறுதியாக இருந்தேன்.”

அங்கிருந்து கிளம்பி மலையேறத் தொடங்கியவர்கள், மூன்றாவது முகாமில் ஓய்வுக்காகத் தங்கினார்கள். ஆனால், மூன்றாவது முகாமில் “ஆக்சிஜன் சிலிண்டர் இல்லாமல் இருக்க முடியாது. உறங்கும்போதுகூட அதை போட்டுக்கொண்டே தான் உறங்க வேண்டியிருந்தது,” என்று விவரிக்கிறார் தமிழ்செல்வி.

பிறகு, அங்கிருந்து நான்காவது முகாமை சென்றடைய 10 மணிநேரம் ஆனது. ஆனால், அங்கு சென்ற நேரத்திலேயே தாமதமாகிவிட்டதால், அங்கு வெறும் இரண்டு மணிநேரம் மட்டுமே ஓய்வெடுக்கக்கூடிய நிலை இருந்துள்ளது.

பிறகு அங்கிருந்து கிளம்பி எவரெஸ்டை நோக்கிய தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். ஆனால், பாதி வழியில் தமிழ்செல்வியின் குழுவில் வந்த மகாராஷ்டிராவை சேர்ந்த ஒருவரின் கை முழுவதும் உறைந்துவிட்டது. “அவர் எவ்வளவோ முயன்றும் அவரால் மலையேற்றத்தைத் தொடர முடியவில்லை. அதனால் அவர் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.”

அப்போதும்கூட அவருடன் வந்த ஷெர்பா தமிழ்செல்வியை எச்சரித்துள்ளார். ஆனால், அவர் மனம் தளராமல் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

**மலையேற்றப் பாதையில் கனவுகளோடு புதைந்து கிடந்த உடல்கள்**

“நானும் என்னுடன் வந்த ஷெர்பாவும்தான் அந்தக் கூட்டத்திலேயே கடைசி நபராக மலையேறிக் கொண்டிருந்தோம். அப்போதுகூட ஷெர்பா என்னிடம் ‘மிகவும் தாமதாகிவிட்டது. ஆக்சிஜன் சிலிண்டரும் குறைவாக உள்ளது. திரும்பிப் போய்விடலாமா?’ என்று கேட்டார்.

ஆனால், என்ன ஆனாலும் சரி தமிழ்நாட்டில் இருந்து பலருடைய நம்பிக்கையை சுமந்துகொண்டு மலையே





எவரெஸ்ட்டை ஏறுவதற்கு முன்பாக, கடல் மட்டத்திலிருந்து 6,119 மீட்டர் உயரத்தில் இருக்கும் லொபுச்சே என்ற சிகரத்தை அடைய வேண்டும்.

அதை அடைந்துவிட்டுத் திரும்பி வந்த முத்தமிழ்செல்வி, பேஸ் கேம்பில் இருந்து கும்பு ஐஸ்பால் என்ற பகுதியை அடைய வேண்டும். அங்கு கிராவர்ஸ் எனப்படும் மிக ஆபத்தான நிலவியல் அமைப்பு உள்ளது.


செங்குத்தாக, எப்போது வேண்டுமானாலும் உடைந்து விழக்கூடிய பனிப்பாறைகள் நிரம்பிய பகுதியான கிராவர்ஸில் பயணிப்பது மிகவும் சவாலானது. அதில் எப்போது வேண்டுமானாலும் தவறி விழவேண்டிய நிலை ஏற்படலாம். ஆகவே அதில் பயணிக்கும்போது துரிதமாகச் செயல்பட வேண்டும்.

இத்தகைய நில அமைப்பில் பயணிப்பதற்கு பாதைகளை வகுக்கும் பணியை நேபாளத்தைச் சேர்ந்த ஷெர்பா இன மக்கள் மேற்கொள்வார்கள். எவரெஸ்ட் சிகரத்திற்கான மலையேற்றத்தில் ஈடுபடும் அனைவருக்கும் பேருதவியாக இருப்பவர்கள் ஷெர்பா வழிகாட்டிகள்தான்.

அப்படி பாதை வகுக்கச் சென்ற ஷெர்பா இனத்தைச் சேர்ந்த மூன்று நபர்களே கும்பு ஐஸ்பால் பகுதியில் தவறி விழுந்து இறந்துவிட்டதாகக் கூறுகிறார் தமிழ்செல்வி.

அவ்வளவு அபாயகரமான பகுதியில் பயணித்த அனுபவத்தைக் கூறியபோது, “எப்போது வேண்டுமானாலும் நாம் நடந்து செல்லும் தரைப் பகுதி உடைந்து விழுந்துவிடலாம் என்ற அச்சத்துடனேயே பயணித்தேன்.

அந்தப் பகுதியில் பயணிக்கும் ஒவ்வொரு நிமிடமுமே மிகவும் முக்கியமானது. அதிவிரைவாகச் செயல்பட வேண்டிய அதேநேரத்தில், சுதாரிப்புடனும் இருந்தாக வேண்டும்,” என்று கூறினார்.



இப்படி அடுத்தடுத்து இழப்புகளைக் கண்களில் பார்த்து பலரும் அதிர்ச்சியில் இருந்த நேரத்தில், ஜேசன் இறந்துவிட்டார் என்ற தகவலை முகாமில் இருந்தவர்களிடம் தெரிவித்த வழிகாட்டி ஒருவர் அழுதுகொண்டே, “இது ஒன்றும் விளையாட்டு இல்லை. இது எவரெஸ்ட் சிகரம். இதை ஏறுவது விளையாட்டான காரியமல்ல. ஆகவே அடுத்த அடி எடுத்து வைப்பதற்கு முன், நன்கு யோசித்துக் கொள்ளுங்கள். இது உங்கள் வாழ்க்கை சம்பந்தப்பட்டது,” என்று கூறியுள்ளார்.

**எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தே தீர வேண்டுமென்ற மன உறுதி**

இந்தத் தருணத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மலையேற்ற வீரர்கள் குழுமியிருந்த அந்த முகாமில் பலரது கண்களில் கண்ணீர் தாரைத் தாரையாகப் பெருக்கெடுத்து ஓடியுள்ளது.

அவர்கள் “அனைவருமே அவரவர் நாடுகளில் ஏதோவொரு வகையில் பிரபலமாக அறியப்பட்டவர்கள். ஆனால், அவை எதற்குமே அந்த இடத்தில் ஒரு பொருளும் இருக்கவில்லை. அது அங்கிருந்த மற்றவர்களையும் மனமுடைய வைத்தது.”

அந்த நாளின் இரவைப் பல கலவையான சிந்தனைகளுடனேயே அனைவரும் கழித்தனர். அடுத்த நாள் காலையில், “இந்தியர்கள் குழுவில் இருந்த 8 பேரில், ஒருவர் தான் வரவில்லை என்றும் பின்வாங்கிச் செல்வதாகவும் அறிவித்தார்.”

உடனே குழுவில் இருந்த மற்றவர்களின் பார்வை, முத்தமிழ்செல்வியின் மீது விழுந்தது. “எனக்கு இதுவே

றிக் கொண்டிருந்த எனக்கு, அவ்வளவு தூரம் சென்ற பிறகு முயற்சியைக் கைவிட்டுத் திரும்ப மனம் வரவில்லை. எவ்வளவு கடினமான சூழ்நிலை ஏற்பட்டாலும் சரி, சிகரத்தை அடைந்தே ஆகவேண்டும் என்று நினைத்தேன்”

“நாங்கள் நடந்து செல்லும் பாதையின் வலதுபுறம் பல உடல்கள் கிடந்தன. அவை அனைத்துமே, எவரெஸ்ட் சிகரத்தைத் தொட வேண்டுமென்ற கனவோடு மலையேறத் தொடங்கியவர்களின் உடல்கள்.

அந்த உடல்களோடு அவர்களது கனவுகளும் அங்கே புதைந்து கிடந்தன. சுடுகாடுகளில்கூட உடல்கள் நிலத்தடியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும். ஆனால், என் கண் முன்னால் அங்கே அந்த உடல்கள் வெளிப்புறத்திலேயே சிதறிக் கிடந்தன.

அதுவும் இரவு நேரத்தில் அந்த இடத்தைக் கடந்து செல்கிறோம். அந்தச் சூழலில் எவ்வளவு உறுதி மிக்க மனிதராக இருந்தாலும் சரி ஒரு நடுக்கம் வரவே செய்யும். அதிலும் எனக்குப் பின்னால் வேறு யாருமே இல்லை. நான் தான் அந்தப் பகுதியைக் கடைசியாகக் கடக்கிறேன்.”

அந்த அனுபவம் ஏற்படுத்திய அச்சம் குரலில் ஒலிக்க விவரித்தார் தமிழ்செல்விக்கு, அந்த உடல்களைக் கடந்து சென்ற ஒவ்வொரு நொடியும் இதயத் துடிப்பு எகிறிக் கொண்டே இருந்ததாகக் கூறுகிறார்.

அதிலும் பல ஆயிரம் மீட்டர் உயரத்தில், ஆக்சிஜன் பற்றாக்குறைக்கு நடுவே பயணித்துக்கொண்டிருந்த நேரத்தில் அப்படியொரு நடுக்கம் ஏற்படுவது அபாயகரமானது.

(10ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# பரீட்சை எழுதிய பிள்ளைகள் செய்த குழப்படி

நிலாந்தன்

அண்மையில் ஓ-எல் பரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சைகள் முடிந்த கடைசி நாளன்று வகுப்பறைகளிலும் வகுப்புக்கு வெளியேயும் அட்டகாசம் செய்ததாக சில ஒளிப்படங்கள் வெளியாகின. இந்த ஒளிப்படங்களை வைத்து மூன்று விதமான கருத்துக்கள் கூறப்பட்டன. முதலாவது, சில மாணவர்கள் செய்த குழப்படிகளுக்காக எல்லா மாணவர்களையும் குற்றங் கூறக்கூடாது என்று. இரண்டாவது, அந்த வயதுக்கு அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க விடுங்கள் என்பது. மூன்றாவது, ஆசிரியர்களின் கைகளில் இருந்து பிரம்பு பறிக்கப்பட்டதால் மாணவர்கள் தறிகெட்டுப் போய்விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு.

பரீட்சை முடிந்த கடைசி நாளைக் கொண்டாடுவது என்பது ஒரு பொதுவான மாணவ உளவியல். அதை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்பதுதான் இங்கு பிரச்சனை. இதை இரண்டு விடயங்கள் தீர்மானிக்கின்றன. ஒன்று பரீட்சை எத்தகையது என்பது. அல்லது கல்விமுறை அல்லது கல்விச் சூழல் எத்தகையது என்பது. இரண்டாவது மாணவர்களுக்கு யார் முன்மாதிரிகள் என்பது.

முதலாவதாக கல்விச் சூழல் பற்றிப் பார்க்கலாம். இலங்கைத் தீவு அதன் இலவச கல்வியைக் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டாலும், நடைமுறையில் போட்டிப் பரீட்சையானது தனியார் கல்வியை ஊக்குவிக்கிறது. அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி “எமது பிள்ளைகள் இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கின்றனர் என்று அரசாங்கம் கூறினாலும் அது பெரும் பொய்” என்று கூறியிருக்கிறார். ‘நாட்டில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவது இலவசக் கல்வியினால் அல்ல, தனியார் பணத்தினால்” என்றுமவர் கூறியுள்ளார்.

போட்டிப் பரீட்சையானது சிறுபிராயமிருந்தே பிள்ளைகளுக்கு இடையே போட்டி உணர்வைப்பொறாமை உணர்வைச்சுயநலத்தை வளர்க்கின்றது. இதன் விளைவாக இலவசக் கல்வியின் உன்னதங்கள் பிரகாசமிழந்து விட்டன. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எனப்படுவது பிள்ளைகளுக்கானது என்பதை விடவும் நடைமுறையில் பெற்றோர்களுக்கு உரியதாகவே காணப்படுகின்றது. ஐந்தாம் ஆண்டு பிள்ளையைக் கசக்கி பிழியும் அந்த பரீட்சையை அகற்றுமாறு பெரும்பாலான கல்வி உளவியலாளர்களும் மருத்துவர்களும் எப்பொழுதோ சொல்லி விட்டார்கள். ஆனால் நாடு இன்றுவரை அதைக் கைவிடத் தயாரில்லை. அதற்கு மாற்று ஏற்பாட்டைக் கண்டு பிடிக்கவும் தயாரில்லை.

ஐந்தாம் ஆண்டிலிருந்து பிள்ளையை கசக்கிப் பிழியத் தொடங்கும் ஒரு கல்வி முறையானது ஓ- எல் பரீட்சையின்போது பிள்ளைக்குச் சித்திரவதையாக மாறுகிறது. கல்வி சுமையாக, சித்திரவதையாக மாறும்பொழுது பரீட்சை ஒரு தத்தாக மாறுகின்றது. அந்தப் பரீட்சையை எழுதிக் கடந்த பிள்ளை அந்த மகிழ்ச்சியை கொண்டாடுந்தானே? ஆனால் அது எப்படிக் கொண்டாடுகிறது என்பதுதான் பிரச்சினை.

“பாராளுமன்றத்தினுள் மிளகாய்த் தூள் வீசி சண்டையிடுகின்றனர், கதிரைகளை வீசி எறிந்து சண்டையிடுகின்றனர், இவற்றை முன்னுதாரணமாக கொண்டே மாணவர்களும் செயற்படுவதாக” இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதுதான் உண்மை. மாணவர்களுக்கு முன்மாதிரிகள் குறைந்துவிட்டன. போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் பெறுமதியைக் குறைத்துவிட்டது. ஆளுமையை உருவாக்கும் பள்ளிக்கூடம் தனியார் கல்வி நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் சந்தைப் பெறுமதியை இழந்து விட்டது. அதே சமயம், தனியார் கல்வி நிறுவனங்கள் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் எந்திரங்களாக அல்லது பந்தயத்துக்குக் குதிரைகளைத் தயார்படுத்தும் பயிற்சி நிலையங்கள் ஆகவே காணப்படுகின்றன.





பந்தயக் குதிரைக்கு அல்லது சவாரி மாட்டுக்கு எதைக் கொடுத்தாவது எதைச் செய்தாவது வேகமாக ஓடவைக்க வேண்டும் என்ற மனோநிலையோடு அணுகும் பயிற்சியாளராக ஆசிரியர்கள் மாறுகிறார்கள். ஓ- எல் பரீட்சை முடிந்தபின் அந்த மகிழ்ச்சியை கொண்டாடிய மாணவர்களைக் குறித்து விமர்சிக்கும் பலரும் அந்த பரீட்சை முடிந்த அடுத்தடுத்த நாளில் ஏ-எல். பாடங்களுக்கான தனியார் வகுப்புகள் தொடங்கியதைப்பற்றி விமர்சித்திருக்கிறார்களா?

ஒரு பரீட்சை முடிந்த கையோடு அடுத்த கட்ட பாடங்களை தொடங்க வேண்டிய தேவை என்ன? யார் முந்தித் தொடங்குவது என்ற போட்டிதானே காரணம்? இந்தப் போட்டி காரணமாக பிள்ளை அதன் ஓய்வை இழக்கின்றது. நவீன கல்வியில் ஓய்வும் படிப்பின் ஒரு பகுதி. ஆனால் பரீட்சை முடிந்த கையோடு பிள்ளை அடுத்த பந்தயத்துக்கு தயாராகின்றது. இது பிள்ளையின் உளவியலை எப்படிப் பாதிக்கும்?

இந்த விடயத்தில் கல்முனை பிரதேச சபை ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டுக்குரிய ஏ.எல் பாடங்களை இம்மாதம் இறுதிவரை ஆரம்பிக்க வேண்டாம் என்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.




அந்த முன்மாதிரியை ஏன் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் பின்பற்றக் கூடாது? அண்மையில் யாழ் மாவட்டச் செயலர் தனியார் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால் அதுகூட ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்குத்தான். அப்படியென்றால் 9 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பந்தய குதிரைகளாக்கப்படுவது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? ஆம். அதை தடுக்க முடியாத ஒரு சமூகச் சூழலே காணப்படுகின்றது. ஏனென்றால் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற வேண்டும் என்ற வெறி பெற்றோருக்கும் அதிகம்.

இது சமூகத்தின் கல்வி பற்றிய கருதுகோள்களினால் தீர்மானிக்கப்படுகிறது. குறிப்பாக விஞ்ஞான, கணிதப் பிரிவுகளுக்குரிய பிள்ளைகளைப் பொறுத்தவரை வாழ்க்கையை வெறுத்து படிக்க வேண்டும் என்று பெற்றோரும் கருதுகிறார்கள் ஆசிரியர்களும் கருதுகிறார்கள். சிறந்த பெறுபேறுகளுக்காக எதையும் பலியிடலாம் என்ற மனோநிலை ஊக்குவிக்கப்படுகின்றது.

யாழ்பாணத்தில் ஏ-எல் பாடங்களை படிப்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை வசதிகளைக் கொண்டிருக்கின்றன? சில தனியார் கல்வி நிறுவனங்கள் தங்களைக் கண்டிப்பானவைகளாகக் காட்டிக்கொள்ள ஒழுக்கத்திலும் பெண் பிள்ளைகளின் விடயத்திலும் கிட்டத்தட்ட தாலிபான்களைப் போலவே நடந்து கொள்கின்றன. ஆனால் அங்கே நூற்றுக்கணக்கில் பிள்ளைகள் ஒன்றாக இருந்து படிப்பார்கள். அது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை ஒழுங்குகளுக்கு எதிரானது. ஒரு வகுப்பறையில் எத்தனை பேர் இருக்கலாம் என்று ஒரு அளவு உண்டு. ஆனால் பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்களில் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஒன்றாக இருந்து கல்வி கற்கின்றார்கள். ஒருவர் மற்றவரோடு முட்டியபடி இருக்க வேண்டும். முதுகை சாய்க்க முடியாது. புத்தகப் பையை வைக்க இடம் கிடையாது போன்ற முறைப்பாடுகள் உண்டு.

சில தனியார் கல்வி ஆசிரியர்கள் பிள்ளைகளை நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு முன் பகிரங்கமாகத் தண்டிக்கிறார்கள். இது கல்வி உளவியலுக்கு முரணானது. பிள்ளையின் குறைந்த புள்ளிகளை சுட்டிக்காட்டி அவமதிப்பது, பிள்ளையை வகுப்பை விட்டு துரத்துவது, போன்ற பகிரங்க தண்டனை முறைகள் உண்டு. இவையனைத்தும் மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள். இதையே பாடசாலை செய்தால் அதற்கு நீதிமன்றம்வரை போகும் சமூகம், தனியார் கல்வி நிறுவனங்களில் நிகழும் இவ்வாறான பகிரங்கத் தண்டனைகளைக் குறித்து அலட்டிக்கொள்வதில்லை. ஏனென்றால் சிறந்த பெறுபேறுகளுக்காக மனிதஉரிமைகள் பலியிடப்படுவதை ஏற்றுக் கொள்ளும் ஒரு சமூகமாக நாம் எப்பொழுதோ மாறிவிட்டோம். அங்கிருந்தும் தொடங்குகின்றது வன்முறை.

சிறந்த பெறுபேறுகளுக்காக உயர்தரத்தில் ஒரு பாடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது. இதனால் பிள்ளைகள் சுயமாகக் கற்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. சுயகற்றலை ஊக்குவிக்காத கல்வி முறை பிள்ளைகளை எங்கே கொண்டு போய் விடும்? சமூகத்தை எங்கே கொண்டு போய் விடும்?

கடந்த ஆண்டு ஓ- எல் பரீட்சை முடிவுகள் வெளிவந்த பொழுது பிள்ளைகள் அதிகம் சுயமாகக் கற்றிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டது. பெருந்தொற்று நோய் காரணமாக பிள்ளைகள் வீடுகளில் முடங்க வேண்டி இருந்தபடியால் அவர்கள் சுயமாக கற்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. அதே சமயம் மாணவர்கள் மத்தியில் ஒரு கூட்டு அபிப்பிராயம் உண்டு. பாடசாலைக்குப் போகும் நேரத்தை குறைத்தால் வீட்டிலிருந்து அதிகமாகப் படிக்கலாம் என்பதே அது. அதாவது தனியார் கல்வி நிறுவனங்களுக்கு போகும் நேரத்தை குறைக்க அவர்கள் தயாரில்லை. மாறாக பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரத்தைக் குறைத்தால் கூடுதலாகப் படிக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் சந்தைப் பெறுமதியைக் குறைத்து விட்டது. ஆசிரியர் மாணவ உறவின் மகிமையைக் குறைத்துவிட்டது. பிள்ளைகளைத் தறுக்கணிக்க வைக்கின்றது. பிள்ளைகளுக்கு இடையே போட்டி பொறாமை போன்றவற்றை ஊக்குவிக்கின்றது. பொதுநலத்தை விடவும் சுயநலத்தை ஊக்குவிக்கிறது. அதன் விளைவாக யாருக்கும் பயப்படாத, யாரையும் மதிக்காத, எதையும் புனிதமாகக் கருதாத ஒரு போக்கு பிள்ளைகள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

எனவே மாணவர்கள் தறிகெட்டு போகின்றார்கள் என்று சொன்னால் அதற்கு அந்தச் சின்னப் பிள்ளைகள் மட்டும் பொறுப்பில்லை. முழுச் சமூகமும் பொறுப்பேற்க வேண்டும். முழுநாடும் பொறுப்பேற்க வேண்டும். முதலாவதாக கல்வி முறைமைதான் குற்றவாளி. அந்த கல்விமுறையின் கைதிகளாக அல்லது கருவிகளாக காணப்படும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பெரிய புரட்சிகரமான மாற்றம் எதையும் செய்துவிட முடியாது. தன் சொந்த பிள்ளையின் விடயத்தில் வேண்டு மென்றால் பெற்றோர் ரிஸ்க் எடுக்கலாம். ஒரு முறைமைக்கு எதிராக பிள்ளையைச் செதுக்குவதில் சவால்கள் உண்டு. ஆனால் அதைவிட வேறு வழியில்லை. ஏனென் றால் இந்தக் கேடு கெட்ட நாடு போட்டிக் கல்விமூலம் உருவாக்கிய படிப்பாளிகள் பலர் ஒரு பொருளாதார நெருக்கடியின் போது நாட்டை விட்டு எப்படித் தப்பிச் செல்வது என்றுதான் சிந்தித்தார்கள்.

ஏன் அதிகம் போவான்? பொருளாதார நெருக்கடியே ஒரு விதத்தில் நாட்டின் கல்விமுறையின் தோல்விதான். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ஒரு சிந்தனைக் குழாமை உருவாக்கியிருந்தார். ‘வியத்மக’ என்று அழைக்கப்பட்ட அச்சிந்தனைக் குழாம் நாட்டின் பெரிய படிப்பாளிகளை வைத்து உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாங்கம்தான் முடிவில் மக்களால் துரத்தப்பட்டது. நாட்டை பெற்றோல் கியூவில் நிறுத்திய படிப்பாளிகள் செய்த குற்றத்தை விடப் பெரிய குற்றத்தையா அந்தப் பதினாறு வயதுப் பிள்ளைகள் செய்துவிட்டார்கள்?

# மனித உடல்கள், உடையும் பனிப்பாறைகள்:...

ஆனால், “அதை என்னால் தவிர்க்க முடியவில்லை. கண் முன்னால் கண்ட மரணங்கள், அருகில் கிடந்த சடலங்கள் அனைத்தும் அப்போது கண்களுக்குள் நிழலாடிக் கொண்டே இருந்தன. நான் கால் வைக்கும் இடத்திலிருந்து பத்து அடி தூரத்திலேயே உடல்கள் கிடக்கின்றன.”

பல ஆயிரம் மீட்டர் உயரத்தில், உயிர்வளி பற்றாக்குறை நிலவும் சூழலில் ஏற்படும் இந்தப் பதற்றம் உயிருக்கே ஆபத்தாகக் கூடும். அத்தகைய அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ்செல்வி, அந்த நேரத்தில் தனது இரண்டு குழந்தைகளையும் நினைத்துக்கொண்டதாகக் கூறுகிறார்.

**கிரீஸ் நாட்டு மலையேற்ற வீரருக்கு செய்த சத்தியம்**

மலையேற்றத்தின்போது, கடும்பனிப்பொழிவால் கால் பாதங்கள் ரத்த ஓட்டம் நின்று விடும் அளவுக்குப் பாதிக்கப்பட்ட கிரீஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரை சந்தித்துள்ளார் தமிழ்செல்வி.

“தமிழ்! நீங்க சிகரத்தை அடையும் மன உறுதியோடு இருந்தால், நிச்சயம் ஏறிவிட்டுத் திரும்பி உயிருடன் வருவேன் என எனக்கு சத்தியம் செய்யுங்கள்,” என்று அவர் தன்னிடம் கேட்டதாகக் கூறுகிறார் தமிழ்செல்வி.

மேலும், “ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் உங்கள் குழந்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். “தனது குழந்தைகளுக்காக உயிருடன் பாதுகாப்பாகத் திரும்பி வருமாறு மாரியோஸிடம் தான் செய்துகொடுத்த சத்தியம்தான், சடலங்களைக் கடந்து செல்லும்போது ஏற்பட்ட கடுமையான பதற்றத்தைத் தணித்துக்கொள்ளவும் தைரியமாக சிகரத்தைத் தொடவும் உதவியதாக,” கூறுகிறார் முத்தமிழ்செல்வி.

“என் குழந்தைகளிடம் கண்டிப்பாகத் திரும்பி வருவேன் என்று கூறிவிட்டு வந்தேன். தமிழ்நாட்டு மக்கள் பலரும் எனக்கு ஆதரவு தெரிவித்தனர். நான் பாதுகாப்பாக வந்துவிட வேண்டும் என்று அக்கறையுடன் கூறியிருந்தனர்.”

சிகரத்தைத் தொடுவதற்கான பயணத்தின் ஒவ்வொரு நொடியின்போதும் இவையனைத்தும் தன் முன்னால் வந்துகொண்டே இருந்தன என்று அவர் கூறுகிறார்.

“மரண வலியை எதிர்கொண்ட ஒவ்வொரு தருணத்திலும் என் குழந்தைகளை நினைத்துக்கொண்டே முன்னேறினேன்.”

அந்த நினைவுகளோடு, “வெளிச்சத்தைத் தேடிச் சென்றுகொண்டே இருந்தேன். நான் சிகரத்தைத் தொட்ட நாளின் அதிகாலை வேளையில் 4 மணிக்கே சூரியன் தென்படத் தொடங்கிவிட்டது. நான் தேடிக்கொண்டிருந்த வெளிச்சம் கிடைத்துவிட்டதைப் போல் உணர்ந்தேன். அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு முன்னேறினேன்.

கடுமையாக வீசிக்கொண்டிருந்த காற்று முகத்தில் வேகமாக அடித்து அடித்து முகத்தின் இடது பக்கம் காயமடைந்தது. ஆனால், நான் கைவிடவில்லை. எனக்குக் கடைசியாகக் கிடைத்த வெளிச்சத்தை இறுகப் பற்றிக்கொண்டு எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தேன்.”

**இமயத்தின் உச்சியைத் தொட்ட தமிழ் பெண்**

அதற்குப் பிறகு கீழே இறங்கத் தொடங்கிய தமிழ்செல்வி, பனிப்பொழிவு கடுமையாக இருந்ததால், கீழே இறங்க முடியாமல் முகாமில் காத்திருந்தார்கள். ஆனால், அவரது ஆக்சிஜன் சிலிண்டர் காலியாகிவிட்டது.

அடுத்து என்ன செய்வதெனத் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தார். அப்போது, “தான் இறந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் அழுதுகொண்டிருந்தார்.”

ஆனால், எனக்கு முன்பாக நான் என்னிடம் இருந்த ஆக்சிஜன் சிலிண்டரை கொடுத்து காப்பாற்றிய ஒருவர் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் படுத்திருந்தார்.

“அப்போது ஒருவரால் எப்படி இவ்வளவு அழுதும் உணர்ச்சியே இல்லாமல் இருக்க முடியும் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு அடுத்த நாள்தான் அவர் கோமா நிலைக்குச் சென்றுவிட்டார் என்பது தெரிய வந்தது,” என்கிறார் தமிழ்செல்வி.

பிறகு, அவருடன் வந்த ஷெர்பா இனத்தைச் சேர்ந்த வழிகாட்டி கொண்டு வந்த கூடுதல் சிலிண்டரை பெற்றுக்கொண்டு அவர் கீழே இறங்கத் தொடங்கினார். அந்த நேரத்தில் கோமாவில் இருந்த அந்த நபர் உட்பட, பல விதமான மனிதர்களின் வாழ்வைக் கண்முன் கண்ட அவருடைய நினைவுகளில் பலவிதமான உணர்ச்சிகளும் பல விதமான அனுபவங்களும் ததும்பிக் கொண்டிருந்தன.

இமயத்தின் மிக உயர்ந்த அந்தச் சிகரத்தின்மீது பட்டுத் தெறித்துக் கொண்டிருந்த சூரியனின் ஒளிக்கதிர்கள், அவரது முகத்திற்கு ஒரு புதிய ஒளியைக் கொடுத்து வழியனுப்பி வைத்தது.

இயற்கையின் அரவணைப்பு, அதன் ஆக்ரோஷம், மகிழ்ச்சி, கண்ணீர், மரணங்கள், சடலங்கள், காயங்கள், வலி, வேதனை, அபாயங்கள் அனைத்தையும் கடந்து மே 23ஆம் தேதியன்று தமிழ்செல்வி எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார்.

“அந்த நாளில் கடைசியாக சிகரத்தைத் தொட்ட நபர் நான் தான். ஆனால் தொட்டுவிட்டேன். தமிழ்நாட்டில் இருந்து வந்த தமிழ் பெண் முத்தமிழ்செல்வி, இமயத்தின், இந்த பூமியின் மிக உயர்ந்த சிகரத்தைத் தொட்டுவிட்டேன்.”

# ஈழத் தமிழ் அகதிப் பெண் இந்தோனேசியாவில் மரணம்!

## உடல் தகனத்துக்கு இடம் வழங்க அங்குள்ள தமிழர்கள் மறுப்பு!

ஜகார்த்தா, ஜூன் 19

இந்தோனேசியா அகதி முகாமில் நோய்வாய்ப்பட்டு ஈழத்தமிழ் அகதிப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

அவரின் உடலை, தமது தகன மையத்தில் எரிக்க அனுமதிக்க முடியாது என்று இந்தோனேசிய தமிழர்கள் மறுத்துள்ளனர். இதையடுத்து, இந்தோனேசியாவில் வாழும் சீக்கிய சமூகத்தினர் தமது தகன மையத்தில் இந்துப் பாரம்பரியங்களுடன், ஈழப் பெண்ணின் சடலத்தை தகனம் செய்ய முழு ஏற்பாடும் செய்துள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக பயணித்த ஈழத்தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு ஒன்று இந்தோனேசியாவில் தடுத்து நிறுத்தப்பட்டது. அதில் பயணம் செய்தவர்கள் இந்தோனேசியாவில் மெடான் நகரில், பெலவான் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் அசோக்குமார்- லலிதா தம்பதியினரும், அவர்களின் இரண்டு பிள்ளைகளும் அந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

லலிதா கடுமையான நீரிழிவு பாதிப்பு ஏற்பட்டு, போதிய மருத்துவ வசதிகள் கிடைக்காமல் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இந்தோனேசியாவில் ஏராளமாக இந்திய தமிழ் மக்கள் நீண்டகாலமாக வாழ்கிறார்கள். லலிதாவின் இறுதிச்சடங்கை அங்குள்ள இந்து மக்களின் தகன மையமொன்றில் நடத்துவதற்கு அங்குள்ள ஈழத்தமிழர்கள் அணுகியபோது, ஈழ அகதியின் உடலை எமது தகன மையத்தில் தகனம் செய்ய முடியாது என அவர்கள் மறுப்பு தெரிவித்து விட்டனர் - என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து, பல தசாப்தங்களாக, அங்கே வசித்து வரும் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சீக்கிய சமூகத்தினரின் உதவியை ஈழத்தமிழர்கள் கோரியுள்ளனர்.

அவர்கள் உடனடியாக, அதற்கான ஏற்பாட்டை செய்து மனித நேயத்தோடு செயல்பட்டனர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)






# கிழக்கில் நடந்த திருட்டுகளுடன் தொடர்புடையவர் வடக்கில் கைது

மட்டக்களப்பு, ஜூன் 19

**மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பல இடங்களில் நடந்த திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி என்று கூறப்படுபவரை கிளிநொச்சியில் வைத்து பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.**

கைதான நபரிடமிருந்து தங்க ஆபரணங்கள், கைபேசிகள், மடிக்கணினி, மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பாக புலனாய்வு செய்த பொலிஸார் சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த இடத்தை கண்டறிந்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் திருகோணமலை - நிலாவெளியை சேர்ந்த 29 வயது நபராவார். அவர் திருமணம் செய்து கிளிநொச்சியில் வசிக்கிறார் என்று தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனையில் 5 மோட்டார் சைக்கிள்களை திருடியுள்ளார். அத்துடன், 5 வீடுகளை உடைத்து நகைகள், கைபேசி, மடிக்கணினி எனப் பெறுமதியான பொருட்களை திருடியுள்ளார். தவிர, மட்டக்களப்பில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துள்ளார் என்றும் அறிய வருகின்றது.

கைதானவரிடம் இருந்து ஒரு மோட்டார் சைக்கிள், 7 கைபேசிகள், உருக்கப்பட்ட நிலையில் தங்கக் கட்டி என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)





# மட்டு. மாநகரத்துக்கு புதிய ஆணையாளர்!

திருகோணமலை, ஜூன் 19

மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராக நடராஜா சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்றுமுன்தினம் வழங்கி வைத்தார்.

ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள நடராஜா சிவலிங்கம் இன்று திங்கட்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்பார் என்று தெரிய வருகின்றது.

## பணத்துக்காக சேவல் சண்டை நடத்திய ஏழு இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு, ஜூன் 19

வாழைச்சேனை - நாவலடியில் சேவல் சண்டை சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 7 பேரை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் கைது செய்தனர். அத்துடன், 6 சண்டை சேவல்கள் ஒரு தொகைப் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 26 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான 7 பேரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## அறநெறி பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன் 19

மட்டக்களப்பு - இருதயபுரம் மேற்கு பால முருகன் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் சிவதொண்டர் திருக்கூடம் அனுசரணையில் பால முருகன் ஆலய அறநெறி பாடசாலை அங்குரார்ப்பணம் திருநீலகண்ட நாயனார் குரு பூசையும் நேற்று நடைபெற்றது.

பெரிய ஊரணி சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை தொடர்ந்து நாயன்மார்களின் திரு உருவப்படம் ஏந்தியவாறு அறநெறி பாடசாலை மாணவர்கள் ஊர்வலமாக அறநெறிப் பாடசாலை வரை சென்றனர்.

இந்த நிகழ்வில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் சுவாமி நீல மாத வானந்தா ஜீ மக ராஜ்,சிவ தொண்டர் திருக்கூட ஆலோசகர் ஜெயராஜ் மற்றும் பால முருகன் ஆலய பரிபாலன் சபையினரின், சிவ தொண்டர் திருக்கூட உறுப்பினர்கள், ஊரணி சரஸ்வதி வித்யாலய அதிபர், சமூக செயல்பாட்டாளர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)


## களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் அலங்கார திருவிழா ஆரம்பமானது!

மட்டக்களப்பு, ஜூன் 19

சுயம்பு லிங்கப் பிள்ளையார் எனப் பெருமை கொண்ட மட்டக்களப்பு - களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா திருவிழா நேற்று முன்தினம் இரவு ஆரம்பமானது.

மிகப் பழமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றெனப் பெயர் பெற்ற இந்த ஆலயத்தின் அலங்கார திருவிழா தொடர்ச்சியாக 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி ஆலயத்தின் சிறப்புமிக்க ஆனி உத்தர தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவடையும். (ஐ)



## காத்தான்குடி கோட்டத்தின் தமிழ்மொழி தின போட்டி!

மட்டக்களப்பு, ஜூன் 19

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்வி கோட்டத்தின் தமிழ் மொழி தின போட்டி நேற்று முன்தினம்காத்தான்குடி மீராபாலிகா தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

காத்தான்குடி கோட்டக் கல்வி பணிப்பாளர் கலாவுதீன் தலைமையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில், பேச்சு, கவிதை, விவாதம், கட்டுரை, வில்லிசை நாட்டார் பாடல் உட்பட பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.



இலங்கைக்கான அமெரிக்க தூதரக பொருளாதார நிபுணர் ஜோவினி மச்சாடோ கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்துக் கலந்துரையாடியவேளை...!

## தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து மட்டு. ஊடகவியலாளர்க்கு செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூன் 19

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிராந்திய ஊடகவியலாளர்கள் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் எமது உரிமைகளை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் விளக்கமளிக்கும் செயலமர்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

செயலமர்வில் வளவாளர்களாக விடிவெள்ளி பத்திரிகை பிரதம ஆசிரியர் எம். பி. எம். பைரூஸ், தகவல் அறியும் உரிமையின் அடிப்படையில் கட்டுரைகள் எழுதும் பத்திரிகையாளர்களுக்கான உதவிக் குறிப்புகள் எனும் தலைப்பில் விரிவுரையை ஆற்றினார். இலங்கை பத்திரிகை ஸ்தாபன திட்ட உதவியாளர் ஆர்த்தி இரவிவர்மன் தகவல் அறியும் சட்டம் தொடர்பான கருத்துரையை வழங்கினார்.

இதில், 40 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# மட்டக்களப்பு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புகொடுப்பு

மட்டக்களப்பு, ஜூன் 19

மட்டக்களப்பு பாலமீன்மடு புதுமைமிகு குழந்தை இயேசு ஆலயத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விசேட திருவிழா கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில், பங்கு தந்தை அருட்பணி இன்னாசி யோசப் அடிகளாருடன் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

ஆலய திருவிழா கொடியேற்ற நிகழ்வானது கடந்த வெள்ளிக்கிழமை மாலை பங்குத்தந்தை தலைமையில் ஆரம்பமாகி தொடர்ந்து நவ நாட் காலங்களில் திருச்செபமாலை, திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை குழந்தை இயேசுவின் திருவுருவ பவனியும் அதனை தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

நேற்று காலை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் யேசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் நடைபெற்ற திருவிழா கூட்டுத் திருப்பலியை தொடர்ந்து ஆலய முன்றலில் குழந்தை இயேசுவின் சுரூப ஆசி இடம்பெற்று, ஆலய வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு பெற்றது.



இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் சீனா பயணம்!

பீஜிங், ஜுன் 19

**உளவு பலூன் விவகாரம் சீனா - அமெரிக்கா இடையே பெரும் விரிசலை ஏற்படுத்தியிருந்தது. இந்த சம்பவம் நடந்து ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் நேற்று ஞாயிற்றுக்கிழமை சீனாவுக்கு சென்றுள்ளார்.**



ஐந்து ஆண்டுகளின் பின்னர் அமெரிக்காவின் உயர்மட்ட தலைவர் ஒருவர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இது வாகும். முன்னதாக, வானிலை கண்காணிக்க அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் சீனாவின் பலூன் அமெரிக்க விமானத்தால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரின் சீனப் பயணம் இரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில், சீனா சென்றுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் சீனாவின் உயர்ட்ட வெளியுறவுக் கொள்கை அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். எனினும், சீன ஜனாதிபதியை சந்திப்பாரா என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை.

இரு வல்லரசு நாடுகளும் தமக்குள் நிலவும் உறவு விரிசலை சரி செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளன. இதேபோன்று வர்த்தக மோதல்களை முடிவுக்கு கொண்டுவர வசதியாக சில தடைப் பட்டியல்களை நீக்கவும் பேச்சுகளை முன்னெடுக்க இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# பாகிஸ்தானின் பிரதமராக மீண்டும் நவாஸ் ஷெரீப்?

கராச்சி, ஜுன் 19

பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப் மீண்டும் பதவியேற்கலாம் என்று அந்த நாட்டின் ஜியோ நியூஸ் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தத் தொலைக்காட்சி கூறியவை வருமாறு,

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பி. எம். எல்.) கட்சியின் மத்திய பொதுக் குழு கூடம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், கட்சியின் நிறுவனரும், தனது மூத்த சகோதரருமான நவாஸ் ஷெரீப் பாகிஸ்தான் திரும்பி, மீண்டும் பிரதமர் பொறுப்பை ஏற்கவிருப்பதை மறைமுகமாகத் தெரிவித்தார் என்று அந்தத் தொலைக்காட்சி குறிப்பிட்டுள்ளது.

முந்தைய ஆட்சியின்போது ஊழல் வழக்குகளில் 10 ஆண்டுகளுக்கும் மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நவாஸ் ஷெரீப் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த 2019ஆம் ஆண்டு லண்டன் சென்று அங்கேயே தங்கிவிட்டார்.

தற்போது அவரது கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சி நடைபெறும் நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

(ஐ)

# மனித மூளை - கணனி இணைப்பு சோதனை இந்த ஆண்டு ஆரம்பம்!

பாரிஸ், ஜுன் 19

அறிவியலின் மற்றோர் உச்ச அடைவாக மனித மூளையைக் கணினியோடு நேரடியாக இணைத்து இயங்கச் செய்விக்கின்ற "நியூராலிங்" பரீட்சார்த்தப் பரிசோதனை இந்த ஆண்டில் முன்னெடுக்கப்படும்.

பாரிஸ் "வீவா ரெக்" வர்த்தகக் கண்காட்சியில் கலந்து கொண்ட அமெரிக்கக் கோடீஸ்வரர் எலான் மஸ்க் இத்தகவலை அங்கு அறிவித்தார்.

ஐரோப்பாவில் மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்புகளை செய்கின்ற பெரு நிறுவனங்கள் புதிய பொருள்களை அறிமுகப்படுத்துகின்ற இந்த மாபெரும் வர்த்தகக் கண்காட்சி கடந்த சில தினங்களாக பாரிஸ் போர்த்து வேர்சாய் கண்காட்சி மண்டபத்தில் நடைபெற்றது. உலகெங்கும் இருந்து தொழில்நுட்பப் பெரு நிறுவனங்களின் உரிமையாளர்கள், அறிவியலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பிரமுகர்கள்

கண்காட்சிக்காகப் பாரிஸுக்கு வருகை தந்திருந்தனர். ஜனாதிபதி மக்ரோன் பிரதம அதிதியாக் கலந்துகொண்டு கண்காட்சியைத் தொடக்கி வைத்தார்.

இந்த முறை கண்காட்சியில் செயற்கை நுண்ணறிவும் அது சார்ந்த தொழில்நுட்ப சாதனங்களுமே முதலிடம் பெற்றிருந்தன. கண்காட்சிக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த எலொன் மஸ்க், கண்காட்சியை ஒட்டி நடத்தப்பட்ட ஒரு மாநாட்டில் எதிர்கால அறிவியல் சாதனைகள் தொடர்பான கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

(ஐ)

உகண்டாவில் பயங்கரவாத தாக்குதல்

# 37 பாடசாலை மாணவர்கள் வெட்டியும் எரித்தும் கொலை!

கம்பாலா, ஜுன் 19

உகண்டாவின் மேற்கு பகுதியில் பாடசாலைக்குள் புகுந்த ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்புடன் தொடர்புடைய பயங்கவரவாத குழு நடத்திய தாக்குதலில் 37 மாணவர்கள் உட்பட 41 பேர் கொல்லப்பட்டனர்.



கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலைக்குள் ஏ. டி. எவ். எனப்படும் பயங்கரவாத குழுவினர் புகுந்தனர். பாடசாலையின் விடுதிக்கு தீ வைத்த இவர்கள் வாள்களால் மாணவர்களை வெட்டி வீழ்த்தினர். இதில் 20 பேர் கொல்லப்பட்டனர். 17 மாணவர்கள் எரித்துக் கொன்றனர் என்றும் தெரிய வருகின்றது. மேலும், 6 மாணவர்களை அவர்கள் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன், அந்தப் பகுதியை சேர்ந்த நால்வரையும் பயங்கரவாத குழு கொன்றதாக உகண்டா இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்த 8 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

ஆபிரிக்க கண்டத்தின் கிழக்கில் அமைந்துள்ள உகண்டா, பிரித்தானிய ஆட்சியிலிருந்து 1962இல் சுதந்திரமடைந்தது. ஆனால், அன்றுமுதல் சர்வாதிகாரம், பயங்கரவாத நடவடிக்கைகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுள்ளது.

உகண்டாவின் மேற்கு பகுதியில் ஐ. எஸ். அமைப்பின் ஆதரவு பெற்ற ஏ. டி. எவ். பயங்கரவாத குழு செயல்பட்டு வருகின்றது. இராணுவத்துக்கும் இந்தக் குழுவுக்கும் இடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், கடந்த 2013ஆம் ஆண்டு முதல் ஏ. டி. எவ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இந்த அமைப்பில் 500இற்கும் மேற்பட்டவர்கள் செயல்பட்டு வருகின்றனர். அயல் நாடான கொங்கோவில் முகாமிட்டுள்ள இந்தப் பயங்கரவாத குழு அடிக்கடி உகண்டாவுக்குள் நுழைந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மகன்களை வரிசையில் நிறுத்தி சுட்டுக் கொன்ற தந்தை கைது!

அமெரிக்காவில் கொடூரம்

நியூயோர்க், ஜுன் 19

தனது மூன்று மகன்களை வரிசையில் நிற்கவைத்த தந்தை, அவர்களை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தை சேர்ந்த சாட் டோர்மன் என்பவரை இந்தக் குற்றத்துக்காக பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட டோர்மன் மனைவி மற்றும் 3 மகன்கள், ஒரு மகளுடன் வசித்து வந்துள்ளார். நேற்று முன்தினம் மகன்களை வரிசையில் நிற்க வைத்த அவர், அவர்களை துப்பாக்கியால் சுட்டார். இதில் இரு மகன்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றொரு மகன் தப்பியோடி ஒளிந்தபோது அவரையும் இழுத்து வந்து சுட்டுக் கொன்றார்.

இதனிடையே, பிள்ளைகளை சுட்டுக்கொல்வதை அவரின் மனைவி தடுக்க முனைந்துள்ளார். இதன்போது மனைவிக்கு கைகளில் காயம் ஏற்பட்டது. அந்த சமயத்தில் மகள் தப்பியோடியுள்ளார்.

அவரின் அபயக் குரலை கேட்ட வாகன ஓட்டி ஒருவர் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

அங்கு அவர்கள் சென்றபோது, மகன்கள் மூவரும் உயிரிழந்துவிட்டனர். தாயாரை மட்டுமே காப்பாற்ற முனைந்தது.

சம்பவத்துக்கு பின்னர் டோர்மன் வீட்டின் தாழ்வாரத்தில் அமர்ந்து இருந்தார். அவரை கைது செய்து பொலிஸார் நடத்திய விசாரணையில் தான் பல மாதங்களாக இந்தக் கொலைகளை செய்யத் திட்டமிட்டிருந்தார் என்று கூறினார். எனினும், இதற்கான காரணம் தெரியவரவில்லை.




(ஐ)




# 1,100 விக்கெட்களை வீழ்த்திய அண்டர்சன்

பர்மிங்ஹாம், ஜூன் 19

பிரபல இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் 1,100 விக்கெட்களை எடுத்துள்ளார்.

40 வயதான இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆஷஷ் தொடரில் 3ஆவது நாளில் தனது முதல் விக்கெட்டை எடுத்துள்ளார். நன்றாக விளையாடி வந்த அலெக்ஸ் ஹாரியை ஆட்டமிழக்க செய்தார். இந்த விக்கெட்டின் மூலம் முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் 1,100 விக்கெட்களை எடுத்து அசத்தியுள்ளார்.

டெஸ்டில் 686 விக்கெட்களை எடுத்துள்ள அண்டர்சன் அதிக டெஸ்ட் விக்கெட் வரிசையில் தொடர்ந்து 3ஆவது இடத்தில் நீடிக்கிறார். வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றியவர்களின் பட்டியலில், முத்தையா முரளிதரன் - 800 விக்கெட்கள்,

ஷேன் வோர்ண் - 708, விக்கெட்கள், ஜேம்ஸ் அண்டர்சன் - 686 விக்கெட்கள், அனில் குமப்ளே- 619 விக்கெட்கள்.




ஐரோப்பிய சம்பியன்ஷிப் உதைபந்து

# எம்பாப்வே, ஜிராட் கோல்கள் பிரான்ஸ் அணி இலகு வெற்றி!

பாரிஸ், ஜூன் 19

ஐரோப்பா சம்பியன்ஷிப் தகுதிச் சுற்றில் வெள்ளி நள்ளிரவு நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முன்னணி அணியான பிரான்ஸ் ஜிப்ரால்டரை எதிர்கொண்டது. இதில், பிரான்ஸ் 3-0 என வெற்றி பெற்றது.

போட்டியின் 3ஆவது நிமிடத்தில் கிங்ஸ்லி வழங்கிய பந்தை சிறப்பான முறையில் கோல் அடித்தார் ஜிராட். பிரான்ஸ் அணிக்காக அவர் அடித்த 54ஆவது கோல் இதுவாகும்.

இதன்பிறகு முதல் பாதிநேரம் ஆட்டம் முடியும் தறுவாயில் இருக்கும்போது தண்டனை உதை வாய்ப்பு மூலம் எம்பாப்பே ஒரு கோல் அடித்தார். இதன் மூலம் பிரான்ஸ் அணிக்காக எம்பாப்வே அடித்த கோல்கள் எண்ணிக்கை 39ஆக உயர்ந்தது. 2ஆவது பாதி ஆட்டத்தில் பிரான்ஸ் மேலும் ஒரு கோல் அடிக்க 3-0 என வெற்றி பெற்றது. (ஐ)

# ஆப்கானுக்கு எதிரான டெஸ்ட் பங்களாதேஷ் சாதனை வெற்றி!

மிர்பூர், ஜூன் 19

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 546 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வரலாற்றில் 3ஆவது பெரிய வெற்றியை பதிவு செய்து சாதனை படைத்துள்ளது பங்களாதேஷ் கிரிக்கெட் அணி.

பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான் அணிகள் இடையிலான ஒரேயோர் ஆட்டம் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடர் மிர்பூரில் நடைபெற்று வந்தது.

இதன் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 382 ஓட்டங்களும், ஆப்கானிஸ்தான் 146 ஓட்டங்களும் சேர்த்தன. 236 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 425 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

முதல் இன்னிங்ஸில் 146 ஓட்டங்கள் விளாசிய நஜ்முல் ஹூசைன் ஷான்டோ மீண்டும் ஒரு முறை சதம் விளாசி அசத்தினார். அவருக்கு உறுதுணையாக விளையாடிய மோமினுல் ஹக் 121 ஓட்டங்கள் விளாசினார். 662 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ் தான் அணி 3ஆவது நாள் ஆட்டத் தின் முடிவில் 11 ஓவர்களில் 2 விக் கெட்கள் இழப்புக்கு 45 ஓட்டங்கள் எடுத்தது.



நேற்று 4ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய ஆப்கானிஸ்தான் 33 ஓவர்களில் 115 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 546 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. ரஹ்மத் ஷா 30, நசீர் ஜமால் 6, அப்ஸர் ஸஷாய் 6,பஹிர் ஷா 7, கரீம் ஜனத் 18, அமிர் ஹம்சா 5, யாமின் அஹ்மத்ஸாய் ஓர் ஓட்டத்தில் நடையை கட்டினர்.

பங்களாதேஷ் அணி தரப்பில் தஸ்கின் அகமது 4, ஷோரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்கள் வீழ்த்தினர். 546 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி தொடரை கைப்பற்றி கிண்ணத்தை வென்றது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஓட்டங்கள் அடிப்படையில் இது 3ஆவது பெரிய வெற்றியாக அமைந்தது.

இந்த வகை சாதனை பட்டியலில் இங்கிலாந்து அணி முதலிடத்தில் உள்ளது. அந்த அணி 1928ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் 675 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. 2ஆவது இடத்தில் அவுஸ்திரேலிய அணி உள்ளது. அந்த அணி 1934ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 562 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது.

# ஆஷஷ் டெஸ்ட் தொடர்: ஆஸி. நிதான ஆட்டம்

பர்மிங்ஹாம், ஜூன் 19

ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நிதானமாக விளையாடி வருகிறது அவுஸ்திரேலிய அணி.

பர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 78 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 393 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

ஜோ ரூட் 152 பந்துகளில், 7 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 118 ஓட்டங்கள் விளாசினார். கைவசம் 2 விக்கெட்கள் இருந்த போதிலும் முதல் நாளிலேயே இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்தும் முடிவை எடுத்து ஆச்சரியமளித்தார்.

இதையடுத்து, துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 14 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் வோர்ணர் 8, உஸ்மான் கவாஜா 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்டத்தை அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து விளையாடியது. டேவிட் வோர்ணர் 9 ஓட்டங்களில் ஸ்டூவர்ட் பிரொட் பந்தில் போல்ட் ஆனார். இதையடுத்து களமிறங்கிய மார்னஸ் லபுஷானை ஸ்ருவர்ட் பிரொட் டக் அவுட் ஆக்கினார்.

தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்திய ஸ்டீவ் ஸ்மித் 59 ஓட்டங்களில் 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பென் ஸ்டோக்ஸ் பந்தில் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

67 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்த நிலையில் களமிறங்கிய டிராவிஸ் ஹெட் மட்டையை சுழற்றினார். 63 பந்துகளில் ஒரு சிக்ஸர், 8 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டிராவிஸ் ஹெட், மொயின் அலி பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

தேநீர் இடைவேளையில் அவுஸ்திரேலிய அணி 61 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 188 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பின்னர் ஆட்டத்தைத் தொடர்ந்த இருவரும் பொறுப்பாக ஆடினர். 199 பந்துகளில் கவாஜா சதம் அடித்தார். கிறீன் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில் அவருக்கு துணையாக அலெக்ஸ் ஹாரி நின்றார்.

நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்டம் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 94 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில், உஸ்மான் கவாஜா 126, அலெக்ஸ் ஹாரி 52 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர். (ஐ)



# இதயம் சார்ந்த பிரச்னைகளுடன் 3,000 குழந்தைகள் பிறக்கின்றன!

## 1500 பேருக்கே சிகிச்சை வழங்கல்

**கொழும்பு, ஜூன் 19**

**நாட்டில் வருடம் ஒன்றில் 3 ஆயிரம் குழந்தைகள் இதயம் தொடர்பான பிரச்னைகளுடன் பிறக்கின்றன. இவர்களில் ஆயிரத்து 500 குழந்தைகளுக்கு மட்டுமே ஒரு வருடத்துக்குள் சிகிச்சை அளிக்க எம்மால் முடிகிறது. எஞ்சிய ஆயிரத்து 500 குழந்தைகளுக்கான சிகிச்சைக்காக அவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை தொடர்கின்றது என கொழும்பு சீமாட்டி மருத்துவமனையின் குழந்தை இருதய நோய் நிபுணரும் ஆலோசகருமான மருத்துவர் துமிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பு லங்கா மருத்துவமனையின் மருத்துவர் பிரதாப் சி ரெட்டி அரங்கில் குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சை திட்ட ஆரம்ப நிகழ்விலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கொழும்பு மேற்கு றோட்டரி கழகம் 3220 மற்றும் றோட்டரி கழகம் ஒவ் கொழும்பு மெட்ரோபொலிட்டன் ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கலந்துகொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பில் கருத்துரைத்த மருத்துவர் மேலும் கூறுகையில்,

பிறவியிலேயே இதய பிரச்னைகளைக் கொண்ட பிள்ளைகளின் உயிர் காக்கும் பணியில் றோட்டரி கழகமும் இந்தியாவும் பெரும் உதவிகளை வழங்கியுள்ளன. அந்த வகையில் இதய பிரச்னை உள்ள குழந்தைகளுக்கு எம்மால் சிகிச்சை அளிக்கவும் அவர்களுக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும் முடியுமானதாக உள்ளது.

கொழும்பு லங்கா மருத்துவமனை உள்ளிட்ட இலங்கையின் முன்னணி சுகாதார சேவை வழங்குநர்களுடன் இணைந்து கொழும்பு மேற்கு றோட்டரி கழகம் 3220 மற்றும் றோட்டரி கழகம் ஒவ் கொழும்பு மெட்ரோபொலிட்டன் வறிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 80 அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டு உதவியுள்ளன.

50 குழந்தைகளின் இதய சத்திர சிகிச்சைக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 65 சிக்கலான இதய அறுவை சிகிச்சைகள் இந்தியாவின் கொச்சின் அம்ரிதா மருத்துவமனையில் மேற்கொள்ள அனுமதித்துள்ளதுடன் 5 உள்நாட்டு மருத்துவர்களுக்கும் 30 தாதியர்களுக்கும் சிக்கலான இதய அறுவை சிகிச்சைகள் பற்றிய பயிற்சிகளையும் வழங்கியுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# தேங்காய் எண்ணெயின் விலையை உயர்த்த சதி!

கொழும்பு, ஜூன் 19

பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களாக தம்மை அடையாளப்படுத்திய ஒரு குழுவின் செயலால் உள்ளூர் சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்க வழி வகுத்துள்ளதாக தேசிய நுகர்வோர் உரிமைக் காப்பக அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது உள்நாட்டு சந்தைகளில் ஒரு தேங்காயின் விலை ரூ.120 மற்றும் ரூ.130 என அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று தேசிய நுகர்வோர் உரிமைக் காப்பக அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களால் சந்தையில் தேங்காயின் விலை அதிகரிக்கிறது. தேங்காய் விலையுயர்ந்தாலும், செயல்திறன் மிக்க விநியோகத்தால் தேங்காய் எண்ணெய் நியாயமான விலைக்கு விற்கப்படுகிறது.

விநியோகத்தை தடை செய்து செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்துவதன் மூலம் தேங்காய் எண்ணெய் விலையை அதிகரிப்பதே இந்த குழுவின் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# பண மோசடி குற்றச்சாட்டில் எம். பியின் சகோதரன் கைது

கொழும்பு, ஜூன் 19

பண மோசடி குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் ஹலீமினின் இளைய சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக தெரிவித்து பண மோசடி செய்தமை தொடர்பான மூன்று முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 4 இலட்சம் ரூபாயை மூவரிடம் பெற்று ஏமாற்றியுள்ளார். ஏமாந்த மூவர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததன் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே, இந்த மூவருக்கும் டுபாய் வீசாக்களை வழங்கினார் என்றும் அவை போலி வீசாக்கள் என்றும் அறிய வந்துள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மாணிக்கக் கல் சுரங்கம் இடிந்து இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 19

மாணிக்கக்கல் சுரங்கம் இடிந்ததில் இருவர் உயிரிழந்தனர். நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் காயமடைந்த மேலும் இரண்டு பேர் காவத்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று கொடக்கவெல பிரதேச செயலாளர் அச்சினி பிரதீபா தெரிவித்தார்.

இரத்தினபுரி கொடக்கவெல - மாதம்பை வடக்கு பிரதேசத்தில் சட்டவிரோதமாக குறித்த பகுதியில் இந்த இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சுப்பர் பெற்றோல் கையிருப்பு இல்லை

கொழும்பு, ஜூன் 19

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் 95 ஒக்ரைன் (சுப்பர்) பெற்றோல் கையிருப்பு இல்லாத காரணத்தால் நாடு முழுவதும் சுப்பர் பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என பெற்றோலிய விநியோகஸ்தர்கள் தெரிவித்தனர்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 95 ஒக்ரைன் பெற்றோல் கையிருப்புகளை உரிய முறையில் பராமரிக்காமையே இந்த நிலைக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# "பாராளுமன்றத் தேர்தல் நடந்து வென்றால் ஜனாதிபதியுடன் சேர்ந்து செயல்படுவோம்"

கொழும்பு, ஜூன் 19

பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றுவதில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால், தேர்தலின்றி பதவிகளை பொறுப்பேற்க நாம் ஒருபோதும் தயாராக இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைந்து செயல்படுவதற்கு ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களிலும் அழைப்பு விடுத்துள்ள போதிலும், அவ்வாறு செயல்பட முடியாத சூழலே தற்போது காணப்படுகிறது. காரணம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது பொதுஜன பெரமுனவுடனேயே இணைந்து பயணித்துக்கொண்டிருக்கிறார்.

அவர்களே நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களாவர். அவ்வாறானவர்களுடன் இணைந்தால் அது ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பிய போராட்டக்காரர்களுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். அவ்வாறு வெற்றி பெற்றதன் பின்னர் ஜனாதிபதியுடனேயே இணைந்து பணியாற்ற நேரிடும். அதில் எவ்வித சிக்கலும் இல்லை. அது அரசியலமைப்பு ரீதியான விடயமாகும். அவ்வாறன்றி, தற்போது சென்று அமைச்சுப் பதவிகளை ஏற்று, அரசாங்கத்தின் பங்காளிகளாக நாம் விரும்பவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு ரீதியில் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், அது மக்கள் ஆணையல்ல. மக்கள் ஆணை அற்ற ஆட்சியாளர்களுடன் எவ்வாறு இணைந்து பணியாற்ற முடியும்?

பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் எண்ணுகின்றனர். ஆனால், பொது ஜன பெரமுனவினர் அமைச்சு பதவி வழங்கப்படவில்லை என ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நெருக்கடிகளுடன் நாட்டு நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதைவிட, பொது தேர்தலுக்கு செல்வது சிறந்ததாகும் - என்றார். (ஐ)

# நடத்துநரின்றி அதிவேக நெடுஞ்சாலையில் இ. போ. ச. பேருந்துகளை இயக்க முடிவு

கொழும்பு, ஜூன் 19

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் நடத்துநர்களின்றி, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் இயக்குவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

இதன்படி, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளின் பயணிகளுக்கு, பயணத்தின் ஆரம்பத்தில் மட்டுமே பயணச்சீட்டு வழங்கப்படும்.

அண்மையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் 34 பயணிகளுக்கு போலி பயணச்சீட்டுகள் வழங்கப்பட்ட மோசடி அம்பலமானதையடுத்தே, பயணத்தின் ஆரம்பத்திலேயே பயணச்சீட்டு வழங்க தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, அடுத்த மூன்று மாதங்களில் அனைத்து உள்ளூர் பேருந்துகள் மற்றும் தொடருந்துகளுக்கான இ-டிக்கெட்டுகளை (இலத்திரனியல் பயணச்சீட்டு) அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. (ஐ)

# கோதுமை மா விலையுயர்வு; உண்மைக்கு புறம்பானது!

## அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்

கொழும்பு, ஜூன் 19

சந்தையில் கோதுமை மாவின் விலை 40 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படும் விடயம் உண்மைக்கு புறம்பானது என்று அத்தியாவசிய உணவு பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கோதுமை மா இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் டொலரின் பெறுமதிக்கு அமைய கோதுமை மாவின் விலை தீர்மானிக்கப்படமாட்டாது - என்றார்.

இதேவேளை, பெரும்பாலான பேக்கரிகள் அதிக விலைக்கே தொடர்ந்தும் பொருட்களை வழங்குவதாக உணவக உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதன் காரணமாக உணவகங்களில் உணவு பொருட்களின் விலையை குறைக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் கூறினர். (ஐ)

## நயினை...

நாள் தீர்த்தத் திருவிழாவும் அன்று இரவு கொடியிறக்கமும் நடைபெறும்.

மறுநாள் 4ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிரசித்தி பெற்ற தெப்போற்சவம் நடைபெறவுள்ளது.

ஆலய திருவிழாவை ஒட்டி அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஆலயத்துக்கு வருபவர்கள் ஆசாரசீல மாக - கலாசார உடையணிந்து வருகை தருமாறு ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ)

## உள்நாட்டு...

மறுசீரமைப்பில் உள்நாட்டு கடன் குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப் படவில்லை. இது குறித்து அரசு விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியிருந்தார்.

இந்நிலையிலேயே பதில் நிதி அமைச்சர் மேற்படி கருத்தை தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

“உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை முன்னெடுப்பதற்கான செயன்முறை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. வங்கி மற்றும் நிதித் துறையின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் அரசு முழு அர்ப்பணிப்புடன் உள்ளது.

எதிர்வுகூறல்கள், முன்கூட்டிய ஊகங்கள் சந்தைத்துறையில் நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்தலாம். எனவே, இந்த விடயத்தில் நாம் பொறுப்புடனும் விடாமுயற்சியுடனும் கருத்துகளை வெளியிடுவது முக்கியமாகும்.

கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில் இரு தரப்பு கடன் வழங்குநர்களுடனான பேச்சுகளில் ஈடுபடுவதில் நாங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளோம். இவை நிதி ஸ்திரத்தன்மையை அடைவதற்கு சாதகமான உடன்படிக்கைக்கு வழிவகுக்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்”, என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கூட்டு...

நடைபெற்றது. முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டம் பிற்பகல் 2.30 மணி வரை தொடர்ந்திருந்தது. இதில், கூட்டமைப்பில் தற்போது அங்கம் வகிக்கும் புளொட், ரெலோ, ஈ.பி. ஆர். எல். எவ்., தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சிகளின் தலைவர்கள் உட்பட ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலா 3 பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற கட்சியில் இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாப்பு இறுதி செய்யப்பட்டது.

தொடர்ந்து, கட்சியின் செயலாளராக புளொட் கட்சியை சேர்ந்தவரும் ஏற்கனவே இந்தப் பதவியை வகித்து வருபவருமான ஆர். ராகவன் தொடர்ந்தும் செயல்படுவார் என்று தீர்மானிக்கப் பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளராக ரெலோ கட்சியை சேர்ந்தவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம், கூட்டுத் தலைவராக செயல்படும் ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் ஊடகப் பேச்சாளராகவும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் க. துளசி பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழரசு கட்சி அண்மையில் தனித்து சென்றது. இதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியை இரா. சம்பந்தன் இழந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எஞ்சி நின்ற புளொட், ரெலோ கட்சிகள் முன்னர் கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்ற ஈ. பி. ஆர். எல். எவ். மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சிகளை இணைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக கூட்டு தலைமையின் கீழ் இயங்கி வருகின்றமை அறிந்ததே. (ஐ)

## 14.3 வீத...

ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் 13,777 ரூபாய் போதுமானது. இந்த வருமானத்தை ஈட்ட முடியாதவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் உணவு பொருட்கள், ஆடைகள் போன்றவற்றின் விலைகளின் அதிகரிப்பு மற்றும் நாட்டில் பணவீக்க நிலைமைகளின் வளர்ச்சி பெரும் அதிகரிப்பை காட்டியது. தனால் நாட்டின் மொத்த சனத்தொகையில் 14.3 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## 2024...

நடக்கும். இதில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். அவர் எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் அல்லது பொது வேட்பாளராக நிறுத்தப்படுவாரா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவே நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் வெற்றி பெற்ற பின்னர் தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்றும் கூறினார். (ஐ)

## உண்மை...

விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் அனுமதியளித்ததும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு டிசெம்பர் மாதம் முதல் செயல்பட ஆரம்பிக்கும் - என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே அரசு இந்த விடயங்களை வேகப்படுத்தியுள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

## மனித...

பூர்வ அறிக்கை ஒன்றையும் வெளியிடவுள்ளன. இந்த அறிக்கையில் இலங்கையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் தன்னிச்சையாக கைதுசெய்யப்பட்டமை, போர் குற்றம் மற்றும் பொருளாதார குற்றங்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறலில் ஈடுபடுத்துதல் போன்ற விடயங்களில் முன்னேற்றம் இன்மை குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## இந்தியாவில்...

பரவலாக்கலை மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளும் படி இந்தியா வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு அழுத்தம் வழங்கு மாறு இந்தியப் பிரதமரை தமிழ் தேசிய கட்சிகள் கூட்டாக வலியுறுத்தும் முயற்சியை ஆரம்பிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

அத்துடன், இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து மீண்டும் இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் ஒன்றை விரைவாக அனுப்புவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

முன்னர், ரெலோ கட்சியின் ஏற்பாட்டில் தமிழரசு கட்சி உள்ளடங்கலாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் ஒன்றாக கையொப்பமிட்டு வைத்து அனுப்பிய கடிதத்தையும் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# நாட்டின் அரசியல் உறுதியை ஜனாதிபதியே சீர்குலைக்கிறார்

## இராதகிருஷ்ணன் எம். பி. சாடல்

கொழும்பு, ஜூன் 19

பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அரசாங்கத்துக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன - என்று பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க இன்று என்ன செய்வது என்பது தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

அரசாங்கத்துக்குள் நிலவும் குழப்பங்களும், மொட்டுக் கட்சிக்குள் நிலவும் குழப்பங்களுமே இதற்கு பிரதான காரணங்களாகும். நிரந்தரமில்லாத அரசாங்கத்தினுள் இன்று ஜனாதிபதியாக செயற்பட்டுக் கொண்டு மேலும் நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவிக்கும் நபராக அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தற்போது நாட்டின் டொலர் பெறுமதி மீண்டும் அதிகரித்துள்ளது. பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளது. மீண்டும் இலங்கையில் பொருளாதார தளம்பல் ஏற்பட்டு பொருளாதார நெருக்கடிகள் தோன்றும் நிலை ஏற்படுவதை அவதானிக்க முடியுமாகவுள்ளது. இதேவேளை தற்போது அரசியல் ஸ்திரமற்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த அரசியல் உறுதியில்லாத நிலையை உருவாவதற்கு காரணமாக இருந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது எல்லோரும் உணர்ந்துள்ளனர். இந்நிலையில் உடனடியாக பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலின் ஊடாக புதிய பாராளுமன்றத்தை உரு வாக்கி ஸ்திரதன்மை வாய்ந்த பலமான அரசியலை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் எதிர்கால சந்ததியினர் வாழ்வ தற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க முடியும் - என்றார். (ஐ)

# இலங்கை இந்த வருட இறுதிக்குள் கடனை மறுசீரமைக்க வேண்டும்

## இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த

கொழும்பு, ஜூன் 19

இலங்கை இந்த வருட இறுதிக்குள் தனது கடனை மறுசீரமைப்பதோடு இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவது முக்கியமென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு டில்லியிலிருந்து வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதை இடைநிறுத்தியுள்ளமை மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையானது இலங்கை செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களின் அடிப்படையில் சர்வதேச சட்டத்துக்கு முரணானதாகும்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தம் காரணமாக காரணமாக சர்வதேச சமூகம் அதனை அனுமதித்துள்ளது.

சுமார் 2 ஆண்டுகளுக்கும் மேல் பல்வேறு பொருட்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு தொடர்ந்தும் பயணிக்க முடியாது. எனவே கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் அதே வேளை , இறக்குமதி தளர்வுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

தற்போது இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையின் ஆரம்பகட்டத்திலேயே உள்ளது. அதன் அடிப்படையில் பணவீக்கத்தைத் தூண்டாத வகையில் வட்டி விகிதங்களை பேணுவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது.

ரூபாயின் பெறுமதியில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றமையும் இந்த காரணியிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு நெருக்கடிகளிலிருந்து படிப்படியாக மீண்டு வரும்போது, புதிய சவால்களை சந்திக்க நேரிடும். ஆண்டிறுதியில் முழுமையான நிலைவரத்தை அறிந்து கொள்ள முடியும். 2024இல் எதிர்பார்க்கப்படும் பொரு ளாதார வளர்ச்சி 1.4 சதவீதமாக அதிகரிக்கக் கூடும் - என்றார். (ஐ)

## கோட்டாபய...

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வலப்பனை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று நாட்டின் பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. தொழில் வாய்ப்புகளை பலர் இழக்கின்றனர். உற்பத்தி துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது. வரி அதிகரித்துள்ளது. வங்கிகளின் வட்டி வீதம் அதிகரித்துள்ளது. ஏற்றுமதிகளுக்கும் வரி அதிகரித்தமையால் எமது நாட்டுக்கு தொழிற்சாலை நிறுவனங்கள் வருவதில்லை. அதனை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

சில பொருளாதார நெருக்கடிகள் நாட்டில் காணப்படுகின்றன. ஆனாலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் எமது நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தை வீழ்த்தும் இரண்டாவது சூழ்ச்சியின் அத்தியாயம் ஆரம்பித்துள்ளதாக என்னால் தெளிவாக கூறமுடியும்.

மக்களை கவனிக்குமாறு அரசாங்கத்திடம் கூறுகிறோம். தொழில்கள் இல்லாமல் செய்ய வேண்டாம். பல துறைகளில் உற்பத்தி பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. கிராமங்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கு காரணம், கிராமத்தின் உற்பத்தி பொருளாதாரம் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்களை சாதகமாக்குவதே அரசாங்கத்தின் ஒரே எதிர்பார்ப்பாகவும், முயற்சியாகவும் இருந்தது. அந்த கலந்துரையாடல்கள் சாதகமாகும் போது எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வீழ்ச்சியடையுமாக இருந்தால், எமது கிராம மக்களின் சிறிய விவசாயம் வீழ்ச்சியடையுமாக இருந்தால்,

கிராமத்திலுள்ள அம்மா, அப்பாக்களின் பிள்ளைகளின் தொழில்கள் பறிக்கப்படுமாக இருந்தால் மற்றுமொரு நெருக்கடியிலிருந்து வெளிவர பல ஆண்டுகள் ஆகும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சுற்றுலா வீசாவில் வருவோர் வியாபார நடவடிக்கைகளில்!

*நாட்டின் வருவாய் பாதிப்பு என சாடல்*

கொழும்பு, ஜூன் 19

சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வரும் அதிகமான வெளிநாட்டவர்கள், இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்குக் கரையோரங்களில், உள்நாட்டு வரி வலைக்கு அப்பால், சுதந்திரமாக தமது வணிக செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றுது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டை கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று சுமத்தியுள்ளது.

இது இலங்கைக்கு சுற்றுலா மூலம் அதிக வருவாய் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், மறுபுறத்தில் வரியால் கிடைக்கும் நன்மைகளை தவிர்க்க செய்துள்ளது.

அத்துடன் உள்ளூர்வாசிகளின் வணிகளுக்கு பாரிய நட்டங்களையும் ஏற்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சுற்றுலா வீசா வைத்திருப்பவர்கள் உணவகங்கள், விருந்தினர் விடுதிகள், யோகா முகாம்கள் போன்ற பல்வேறு வணிகங்களை நடத்தி வருகின்றனர்.

அறுகம் குடா, அஹங்கம, உனவடுன, வெலிகமை, மிரிஸ்ஸ போன்ற இடங்களில் இந்த செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தநிலையில், அந்தப் பகுதிகளில் உரிமம் பெற்ற வணிகங்களை நடத்தும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள், சுற்றுலா பயணிகளின் இந்த செயல்பாடுகளை சட்டவிரோதமானது என்று தெரிவித்துள்ளனர்.

எனினும் அவர்கள் தம்மை இனங்காட்டிக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை என்று ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

# மன்னார் இளைஞர் கொலை; ஒரே குடும்பத்தவர் 4 பேர் கைது

மன்னார், ஜூன் 19

மன்னார் - நானாட்டான் - அச்சங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காதல் விவகாரம் தொடர்பில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் பின்னர் மோதலாக மாறியதாக தெரிவிக்கப் படுகிறது.

இதன்போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட இருவர் நானாட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் அச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கைதானவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப் படுகின்றது.

(தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

# எச். ஐ. வி. தொற்று, மரணம் நாட்டில் அதிகரித்துள்ளன!

கொழும்பு, ஜூன் 19

நாட்டில் எச்.ஐ. வி. நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒரு வருடத்திற்குள் 620 புதிய நோயாளிகள் மற்றும் 81 இறப்புகள் பதிவாகியுள்ளன என்று தேசிய சுகாதார சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆணுறைகளின் சீரற்ற பயன்பாடும் இதற்கு பிரதான காரணம் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு பதிவான ஒட்டுமொத்த தொற்றுகளுடன் ஒப்பிடும்போது, இந்த வருட முதல் காலாண்டில் 13 சதவீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

எச். ஐ. வி. தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை 4,556 இலிருந்து 5,176ஆக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், 165 புதிய நோயாளிகள் மற்றும் 15 இறப்புகள் பதிவாகியுள்ளன. எனினும் 2022 ஆம் ஆண்டுவரை மொத்தம் 1,520 எச்ஐவி தொடர்பான இறப்புகள் பதிவாகியுள்ளன. (ஐ)

# குருந்தூர், திரியாய் விகாரை காணிகளில் பௌத்தர் அல்லதோர் குடியேற முடியாது!

## எல்லாவல மேதானந்த தேரர்



கொழும்பு, ஜூன் 19

**குருந்தூர், திரியாய் ஆகிய விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளில் பௌத்தர்கள் அல் லாதவர்களை குடியேற்றுவதற்கு இடமளிக்க முடியாது - இவ்வாறு கூறியுள்ளார் எல்லாவல மேதானந்த தேரர்.**

விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார். இந்தப் பின்னணியில் எல்லாவல மேதானந்த தேரர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், குருந்து விகாரை மற்றும் திரியாய் விகாரை தொடர்பில் நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவான கடிதமொன்றை அனுப்பியுள்ளேன். அதன் பின்னர் அவரது செயலாளர் ஊடாக பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் பிரகாரம் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் பின்பற்றப்படும் என்றும் நம்புகின்றேன்.

மேலும், குழு அமைத்து ஆராய்வதற்கு எந்தவொரு சர்ச்சையான விடயங்களும் அங்கு இல்லை என்பதை இங்கு தெரிவிக்க வேண்டியுள்ளது.

நான் குருந்து மலைக்கு நேரடியாக சென்றுள்ளேன். அங்கு வரலாற்றில் பல தம்மபத வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. ஆகவே, அந்த புராதன விகாரைக்குச் சொந்தமான பெருமளவு நிலங்கள் காணப்படாமல் அவ்விதமான வழிபாடுகளைச் செய்ய முடியாது.

மேலும், புராதன சின்னங்களை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமானது. அந்தச் சின்னங்கள் உலக மரபுரிமைகளாக மதிக்கப்பட வேண்டியவை. அவ்வாறான நிலையில், குருந்து மலையை சூழவுள்ள நிலங்களை தமிழ் மக்களுக்கு வழங்குவது பொருத்தமற்ற செயல்பாடாகும். அதனை வழங்காதிருப்பது தான் மிகச் சரியான விடயமாகும்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதை நாம் எதிர்க்கவில்லை. நான்கூட அந்த மக்களை நேரில் சென்று பார்த்து உதவிகளை வழங்கிய ஒருவர்தான். ஆனால், அவர்களுக்கு காணிகள் தேவையாக இருந்தால் பிறிதொரு இடத்தில் வழங்க முடியும். அதற்குரிய வசதிகளும் முல்லைத்தீவில் காணப்படுகின்றன.

உண்மையில் குருந்து மலையை சூழவுள்ள காணிகளை தமிழ் மக்கள் கோரவில்லை. அதனைக் கோருவது தமிழ் அரசியல்வாதிகள் தான். இவர்கள் தான் திரியாய விகாரைக்குச் சொந்தமான காணிகளையும் கோருகின்றார்கள். திரியாயவும் புத்தபெருமானுடன் நேரடியாக தொடர்புபட்ட வரலாற்று பிரதேசமாகும்.

அவ்வாறு இருக்கையில், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த புராதன இடங்களை சிதைக்கும் வகையில் காணிகளை கோருகின்றார்கள். இவர்கள் உண்மையிலேயே பிரிவினையை கோரிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பதையிலேயே செல்கின்றார்கள். அந்த தவறான பாதையில்தான் தமிழ் மக்களையும் கொண்டு செல்வதற்கு முனைகின்றார்கள்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் மிகவும் இறுக்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

இந்த நாட்டில் மீண்டும் இன, மத முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. தமிழ் மக்களுக்காக காணிகளை கோருகின்ற தமிழ் அரசியல்வாதிகள் அந்த மக்களுக்காக எதனையும் செய்யவே இல்லை. அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவிகளை வழங்காது, அந்த மக்களை பகடைக்காயாக பயன்படுத்தி பிரிவினை அரசியல் செய்வதற்கே முனைகின்றார்கள்.

அதேநேரம், பௌத்தர்கள் அல்லாத எவரையும் பௌத்த விகாரைகளை சூழவுள்ள பகுதிகளில் குடியேற்றுவதையோ வசிப்பதையோ ஏற்றுக்கொள்ள முடியாது. அது பௌத்த தர்மத்துக்கு முரணான செயல்பாடாகும். ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளில் கைவைத்து பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தி பெரும் பாவத்தை செய்யக்கூடாது - என்றார். (ஐ)

# இங்கிலாந்து, அமெரிக்காவைவிட ரணிலின் தொலைநோக்கு பெரியது!

## வஜிர அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, ஜூன் 19

சரிந்த நாட்டை மிகக் குறுகிய காலத்தில் உலகுக்கு முன்னுதாரணமாக உயர்த்திய ரணிலின் தொலைநோக்குப் பார்வை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளை விடவும் பெரியது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தின் பத்தேகம மற்றும் அக்மீமன ஆகிய தொகுதிகளின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்த தேசத்தை மீளக் கட்டியெழுப்பவும், அதனை உலக நாடுகளுடன் முன்னோக்கி கொண்டு செல்லவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முடிந்ததாக அவர் தெரிவித்தார்.



ஒரு வருடத்திற்கு முன்னர் முற்றாக வீழ்ச்சியடைந்த நாட்டை ரணில் விக்ரமசிங்க கைப்பற்றி, உலகிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து, நாட்டை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதாக வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளான உலகின் ஏனைய நாடுகள் இன்னும் சரியாக எழுச்சி பெற முடியாத நிலையில், ஜனாதிபதியின் சரியான தொலைநோக்கு பார்வையால் நாடு மீண்டும் எழுச்சி பெற்றுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# பணத்தை களவெடுத்த பின்னர் முறைப்பாடு செய்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 19

கொலன்னாவை மஹா போதி விஹாராதிபதிக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தை தானே திருடிவிட்டு பணத்தை காணவில்லை என்று பொலிஸூக்கு முறைப்பாடு செய்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இந்த திருட்டு தொடர்பில் முறைப்பாடு செய்த ஊழியர் மீது சந்தேகமடைந்த பொலிஸார் நீண்ட நேர விசாரணைகளை முன்னெடுத்த போது தனக்கு போதிய சம்பளம் கிடைக்காததல் தான் இவ்வாறு திருடினார் என்று பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டார்.

பொலிஸாரை தவறாக வழிநடத்துவதற்காக யன்னல் கண்ணாடிகளை அகற்றியதாகவும் சந்தேக நபர் மேலும் தெரிவித்துள்ளார்.

63 வயதான சந்தேக நபர் ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.